11.12.15

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 'ஜீரோ பட்ஜெட்' விவசாயம்: விஞ்ஞானி உறுதி

பல்லடம்,: உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டுமெனில், 'ஜீரோ பட்ஜெட்' இயற்கை வேளாண் முறையை பின்பற்ற வேண்டும்," என, இயற்கை வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பாலேகர் பேசினார்.'ஜீரோ பட்ஜெட்' இயற்கை விவசாயம் குறித்த கருத்தரங்கு, திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் நேற்று நடந்தது. 'நபார்டு' வங்கி தலைமை பொது மேலாளர் வெங்கடேஸ்வர ராவ் தலைமை வகித்தார்.இயற்கை வேளாண் விஞ்ஞானி சுபாஷ் பாலேகர் பேசியதாவது:மனித வாழ்க்கை, இயற்கையை சார்ந்து வாழ்வதாகும். இயற்கையை அதிகம் நேசிப்பவர்கள் விவசாயிகள். அவர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளை, அரசோ அல்லது அரசு சார்ந்த நிறுவனங்களோ, கண்டு கொள்வதில்லை. விவசாயம் யாருக்கும் எதிரானது அல்ல; பிரச்னைகளை நாமே சரி செய்ய துவங்குவதே, இயற்கை விவசாயம். நம் நாடு உணவு உற்பத்தியில், தன்னிறைவு அடைந்து விட்டதாக பொய் பிரசாரம் செய்யப்படுகிறது. இன்று வரை அரிசி, கோதுமை, பழங்கள், எண்ணெய் வித்துகள், சிறு தானியங்களை, இறக்குமதி செய்கிறோம். அதிக மகசூல், அதிக லாபம் என, மண்ணுக்கு கேடு விளைவிக்கும் ரசாயன கலப்பு உரங்களை இட்டு, மண்ணையும், உணவையும் விஷமாக மாற்றி வருகிறோம். உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற, வேளாண் பல்கலைகள், இதுவரை எந்த ஆலோசனையும் வழங்கவில்லை. வேளாண் அறிஞர்கள் இதற்கு பதிலளிக்க வேண்டிய கட்டாயம் வரும். ரசாயன கலப்பு உரங்களால், என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என, அப்போது தெரியும்.

மண் மாசு, உணவு விஷம், புவி வெப்பம், விவசாயிகள் தற்கொலை என, பல பிரச்னைகள் நம்மை சுற்றியுள்ளன. இதற்கு ஒரே தீர்வு, செலவில்லா இயற்கை விவசாயம்.

'ஜீரோ பட்ஜெட்' முறையில் சாம்பல், மணிச்சத்து, ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம் போன்ற இயற்கை உரங்களை தயாரித்து, பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் அதிக மகசூல் பெறலாம்; அதிக லாபம் பெற முடியும். இவ்வாறு, சுபாஷ் பாலேக்கர் பேசினார்.தமிழக விவசாயிகள் சங்க தலைவர் செல்லமுத்து வாழ்த்திப்பேசினார். சோனி இந்தியா தென் மண்டல மனிதவள மேம்பாட்டாளர் வசந்தகுமார், ஸ்ரீவிக்னேஷ் மஹால் நிறுவனர் மயில்சாமி பங்கேற்றனர். சுற்று வட்டாரப்பகுதிகளை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பயன்பெற்றனர்.

## தஞ்சையில் மிதமான மழை

தஞ்சை : தஞ்சை மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் அதிகாலை முதல் மிதமான மழை பெய்து வருகிறது. திருவையாறு, வையம், ஒரத்தநாடு உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக மழை

கன்னியாகுமரி : கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. மயிலாடி, பேச்சிப்பாறை, ஆரல்வாய்மொழி உள்ளிட்ட பகுதிகளிளிலும் மழை பெய்து வருகிறது.

## மேட்டூர் நீர்மட்டம: 96.03 அடி

சென்னை: மேட்டூர் அணை நிலவரம் - (11.12.15) நீர்மட்டம் - 96.03 அடி நீர் இருப்பு - 59.81 டி.எம்.சி நீர் வரத்து - 3315 கன அடி நீர் வெளியேற்றம் - டெல்டா பாசனத்திற்கு - 500 கன அடி கால்வாய் பாசனத்திற்கு - 500 கன அடி.

## தூத்துக்குடியில் கனமழை

தூத்துக்குடி : தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. முத்தையாபுரம், புதுக்கோட்டை பகுதிகளிலும் தற்போது மழை பெய்து வருகிறது.

## வினாடிக்கு 50,000 கன அடி வீதம் 5 மணி நேரம் திறக்கப்பட்டதா



செம்பரம்பாக்கம் ஏரியில், டிச., 1 நள்ளிரவில் துவங்கி, ஐந்து மணி நேரத்திற்கு, வினாடிக்கு, 50 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டதாக, மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில், வட கிழக்கு பருவ மழை தீவிரமடைந்த நிலையில், செம்பரம்பாக்கம் ஏரியில், அதிக அளவு உபரிநீர் வெளியேற்றப்பட்டதால், குன்றத்துார் முதல் கோட்டூர்புரம் வரையிலான பகுதிகள், வெள்ளத்தில் மூழ்கின. இதில், செம்பரம்பாக்கம் ஏரியில், நவ., 30 முதல், டிச., 1 மற்றும் 2ல் நடந்த நிகழ்வுகள், பல சந்தேகங்களை எழுப்பி உள்ளன. மழுப்பல் நீர் வரத்து அதிகரித்த சமயத்தில், ஏரியின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, உபரி நீர் வெளியேற்றப்பட்டதாக, பொதுப்பணித்துறை சார்பில் கூறப்படுகிறது.

திருமுடிவாக்கம், திருநீர்மலை பகுதியில், செம்பரம்பாக்கம் உபரி நீர் கால்வாய் இணையும் பகுதி வரை, அடையாறு, சிறு ஓடையாகவே இருக்கிறது. மணிமங்கலம் ஏரி, பொத்தேரி உள்ளிட்ட சில ஏரிகளின் நீர் மட்டுமே, இதற்கு ஆதாரமாக உள்ளது. இந்த ஏரிகள் அனைத்தும், நவம்பர் கடைசி வாரத்தில் பெய்த மழையின் போதே நிரம்பி விட்டன. அப்போது இருந்தே, அவற்றின் உபரி நீர், அடையாற்றில் சென்று கொண்டு இருந்தது. இந்நிலையில், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து, உபரி நீர் திறந்து விடப்பட்ட போது மட்டுமே, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதை, அடையாற்றின் கரையோர பகுதி மக்கள் பார்த்துள்ளனர். காட்டாற்று வெள்ளம்

இதுகுறித்து பொழிச்சலூரில் இருந்து தரப்பாக்கம் செல்லும் பாலத்தின் அருகில் வசிக்கும் மக்கள் கூறியதாவது: நவம்பர் மாதத்தில், செம்பரம்பாக்கம் ஏரி திறக்கப்பட்ட போது, ஓரளவுக்கு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. டிச., 1ல் அடையாற்றில், கரைக்கு உட்பட்ட அளவிலேயே நீர் ஓடியது. நாள் முழுவதும் கன மழை பெய்த நிலையில், மாலையில் வெள்ள நீரின் அளவு அதிகரித்தது. இரவு, 11:00 மணிக்கு, ஆற்றின் கரையை கடந்த நிலையில், எங்கள் பகுதியில், காட்டாற்று வெள்ளம் போல தண்ணீர் ஓடியது. வீடுகளில் இருந்தவர்கள் ஓட்டம் பிடித்தோம். இந்த சமயத்தில், தரையில் இருந்து, 21 அடி உயரத்துக்கு வெள்ள நீர் ஓடியது. ஆனால், அதிகாலை, 4:00 மணியில் இருந்து கரையோர பகுதிகளில் வெள்ளத்தின் அளவு குறையத் துவங்கியது.

இதன் பின், டிச., 2ம் தேதி காலையில் அவ்வப்போது, ஓரிரு அடி அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்து இறங்கியது. மொத்தம், ஐந்து மணி நேரத்தில் வழிந்தோடிய வெள்ளத்தில் இங்குள்ள குடியிருப்புகள் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயின.

அப்பாவி மக்களின் உயிர், அதிகாரிகளின் பார்வையில் எந்த மதிப்பும் இல்லை என்பது, இப்போது தான் தெரிகிறது. அந்த, ஐந்து மணி நேரத்தில், அங்கு நடந்தது என்ன என்பதை விசாரித்தால் தான், அதிகாரிகள் செய்த விதிமுறை மீறல்கள் வெளிச்சத்துக்கு வரும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கால்நடைகளுக்குஇலவச சிகிச்சை

சென்னை,:வெள்ளம் பாதித்த பகுதிகளில் கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை முகாம் நடத்த தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலை ஏற்பாடு செய்துள்ளது. தங்கள் பகுதியில் முகாம் நடக்க வேண்டும் என விரும்புவோரும், தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.சென்னை வியாசர்பாடி, வில்லிவாக்கம், தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் முகாம் நடக்கிறது. இங்கு ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி, சிகிச்சை அளிக்கப்படுகிறது; டிச., 16 வரை தொடரும். விவரங்களுக்கு, 98400 58189, 94448 10657 . இதுபோல தமிழகம் முழுவதும் பல நகரங்களில் முகாம்கள் நடைபெற உள்ளதாகவும் பல்கலை துணைவேந்தர் எஸ்.திலகர் தெரிவித்துள்ளார்.

## வடகிழக்கு மழை குறைகிறது: மக்கள் நிம்மதி



சென்னை:'தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழையின் தாக்கம் குறைந்து வருகிறது' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால், மக்கள் நிம்மதி அடைந்து உள்ளனர். வட கிழக்கு பருவ மழை, 10 ஆண்டுகளுக்கு பின், அதன் கடுமையை, நடப்பு ஆண்டு காட்டிவிட்டது. அக்டோபரில் துவங்கி டிசம்பர் வரை, மூன்று மாதங்களுக்கு பெய்யக் கூடிய பருவ மழை, இன்னும், 20 நாட்களில் முடிவுக்கு வர உள்ளது.இந்நிலையில், 'மழையின் வேகம்

குறைகிறது' என, வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. வட கிழக்கு பருவ மழை, 2005க்குப் பின், பற்றாக்குறை மற்றும் சராசரியாகவே பெய்துள்ளது. குறிப்பாக, 2012ல் - 16, 2013ல் - 33, 2014ல் - 2 சதவீத மழை, சராசரியை விட குறைவாகவே பெய்துள்ளது. ஆனால், நடப்பாண்டில் வட கிழக்கு பருவ மழை துவங்கிய பின், வங்கக் கடலில் எட்டு முறை குறைந்த காற்றழுத்த தாழ்வு ஏற்பட்டுள்ளது; இதனால், தமிழகம் முழுவதும் பரவலாக கன மழை பெய்துள்ளது. டிச., 1ல், சென்னை மற்றும் சுற்றுப்பகுதியில் மிக கன மழை பெய்தது. தாம்பரத்தில் அதிகபட்ச மாக, 24 மணி நேரத்தில், 49 செ.மீ., மழை பதிவானது. அதன்பின், மழையின் வேகம் படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது.இதுகுறித்து, வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட அறிக்கை:வங்கக் கடலின் தென் மேற்கு பகுதியில், குமரிக் கடலில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு வலுவிழந்து விட்டதால், தமிழகத்தில் இனி கன மழைக்கு வாய்ப்பு இல்லை. அடுத்த மூன்று நாட்களுக்கு, கன்னியாகுமரி, துாத்துக்குடி மாவட்டங்களில் லேசான மழை பெய்யலாம். சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் மழைக்கான வாய்ப்பு மிகக் குறைவு. டிச., 14 வரையிலான வானிலை முன்னறிவிப்பின் படி, தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யலாம்.

சென்னையில், அடுத்த, 48 மணி நேரத்துக்கு, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்; ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யலாம்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.மழை அளவு: நேற்று காலை, 8:30 மணி வரை, தமிழகத்தில் அதிகபட்சமாக, தேனி மாவட்டம் உத்தமபாளையம் - 4, கடலுார் மாவட்டம் பண்ருட்டி, விருத்தாசலம், தர்மபுரி மாவட்டம் அரூர், விழுப்புரம் மாவட்டம் உளுந்துார்பேட்டை - 3 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.

**மழை குறைய காரணம் என்ன:**

சென்னை வானிலை மைய முன்னாள் இயக்குனர் ஒய்.இ.ஏ.ராஜ் கூறியதாவது:பூமத்திய ரேகைக்கு அருகில் இருக்கும் காற்றழுத்த தாழ்வு, தற்போது சற்று விலகிச் சென்றுவிட்டது; இதனால், தமிழகத்தில் மழை

குறைந்துள்ளது. கடலின் வெப்பம் குறைந்து கொண்டே வருகிறது. கடலில், 10 - 15 மீட்டர் ஆழத்தில் இருக்கும் தண்ணீர் மேல் எழுந்து வரும். இந்த நீர் குளிர்ச்சியாக இருப்பதால், கடலின் வெப்பமும் தணிந்து வருகிறது. எனவே, அடுத்த ஒரு வாரத்துக்கு கன மழைக்கான வாய்ப்பு குறைவு. வட கிழக்கு பருவ மழையின் அடுத்தகட்டத்தை, இப்போதைக்கு கணிக்க முடியாது. பல நேரங்களில், ஜனவரி முதல் வாரம் வரை கூட மழை பெய்துள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## பாபநாசம் குறைந்தது; மணிமுத்தாறு உயர்ந்தது



திருநெல்வேலி:நெல்லையில் தொடர் மழையி னால் மணிமுத்தாறு அணை நிரம்பியது. அணையில் இருந்து 7000 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து அணைகளும் நிரம்பிவிட்டன. மணிமுத்தாறு அணை நேற்று காலை 5 மணியளவில், அதன் மொத்த உயரமான 118 அடியை எட்டியது. மணிமுத்தாறு அருவியில் தொடர்ந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அணைக்கு வரும் தண்ணீர் முழுவதும் அப்படியே வெளியேற்றப்படுகிறது. நேற்று காலை 2 ஆயிரம் கனஅடி திறக்கப்பட்டது. படிப்படியாக அதிகரித்தது. நேற்று மாலையில் வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடி திறக்கப்பட்டதால், மொத்தமுள்ள ஏழு ஷட்டர்கள் வழியாகவும் தண்ணீர் ரம்மியமாக கொட்டியது.

இந்த தண்ணீர் முழுவதும் தாமிரபரணி ஆற்றில் விடப்படுகிறது. மேலும் மணிமுத்தாறு அணையின் பிரதான கால்வாய் மூலம் வினாடிக்கு 400 கனஅடி திறக்கப்படுகிறது. இதன்மூலம் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் 25 ஆயிரத்து 434 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. தாமிரபரணியில் வெள்ளம்: கடந்த சில தினங்களாக பாபநாசம், சேர்வலாறு அணைகளில் அதிகமழைப்பொழிவு இருந்ததால் சுமார் 20 ஆயிரம் கனஅடி தண்ணீர் தாமிரபரணியில் திறக்கப்பட்டது. தற்போது பாபநாசத்தில் இருந்து சுமார் 8 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.மணிமுத்தாறு அணையில் இருந்து திறக்கப்படும் 7 ஆயிரம் கனஅடி தண்ணீர் மற்றும், பச்சையாற்றின் உபரிநீர், கடனாநதி, ராமநதி ஆகிய அணைகளின் உபரிநீர் சேர்ந்து தற்போதும் தாமிரபரணி ஆற்றில் வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடிக்கும் அதிகமான தண்ணீர் வீணாக கடலுக்கு செல்கிறது. இருப்பினும் தாமிரபரணி வெள்ளத்தால் எங்கும் பாதிப்பு இல்லை.

## கால்நடைகளுக்குஇலவச சிகிச்சை

சென்னை,:வெள்ளம் பாதித்த பகுதிகளில் கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை முகாம் நடத்த தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலை ஏற்பாடு செய்துள்ளது. தங்கள் பகுதியில் முகாம் நடக்க வேண்டும் என விரும்புவோரும், தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.சென்னை வியாசர்பாடி, வில்லிவாக்கம், தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளில் முகாம் நடக்கிறது. இங்கு ஆடு, மாடு மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி, சிகிச்சை அளிக்கப்படுகிறது; டிச., 16 வரை தொடரும். விவரங்களுக்கு, 98400 58189, 94448 10657 . இதுபோல தமிழகம் முழுவதும் பல நகரங்களில் முகாம்கள் நடைபெற உள்ளதாகவும் பல்கலை துணைவேந்தர் எஸ்.திலகர் தெரிவித்துள்ளார்.

## வெங்காயத்திற்கு நல்ல விலையால் விவசாயிகள்மகிழ்ச்சி:மாற்று பயிர் விவசாயத்தால் பலன்

வத்தலக்குண்டு;வத்தலக்குண்டு பகுதியில்மாற்றுப் பயிர் முறையில் விவசாயம் நடந்ததால் 4 ஆண்டுகளுக்குப் பின் வெங்காயத்திற்கு லாபம் கிடைத்துள்ளதாக

விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.கடந்த காலங்களில் புரட்டாசி மாதம் வெங்காயம் நடுவதற்கு விவசாயிகளுக்கு இடையே கடும் போட்டி ஏற்படும். இதனால் 5 எக்டேருக்கு வெங்காயம் நடப்படும். 90 நாட்களில் அதிகளவு வெங்காயம் அறுவடையாகும் போது விலை வீழ்ச்சி அடைவது வழக்கம். வியாபாரிகளும் அதிக செலவின்றி வெங்காயம் கிடைப்பதால் சொற்ப விலைக்கு வாங்கினர். இதனால் விவசாயிகள் வெங்காயத்தால் நஷ்டம் அடைந்தனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வெங்காயம் தேவைப்படுவதால் பிற மாவட்டங்களில் இருந்து வெங்காயம் சென்னைக்கு அனுப்பப்படுகிறது. இதனால் வத்தலக்குண்டிற்கு பிற மாவட்டங்களில் இருந்து வெங்காய வரத்து இல்லாததால் தேவை அதிகமாகி உள்ளது. உள்ளூர் விவசாயிகளிடம் கொள்முதல் செய்ய துவங்கி உள்ளனர்.

கடந்த செப், அக்டோபரில் வெங்காயம் நடவு செய்து விட்டனர். பலர் மழையை எதிர்பார்த்து இருந்ததால் நடவு செய்யவில்லை. மாற்று பயிராக பருத்தியை நடவு செய்ததால் வெங்காயத்தின் பரப்பளவு 2 எக்டேராக குறைந்து உள்ளது. வெங்காயம் நடவு செய்தவர்களுக்கு அறுவடையாகி நல்ல விலை கிடைத்து வருகிறது. கீழக்கோயில்பட்டி விவசாயி தங்கராஜ் கூறுகையில்,"" நான்கு ஆண்டுகளாக வெங்காயத்தால் நஷ்டம் அடைந்தோம். தற்போது முன்பே நடவு செய்து, அறுவடைக்கு முந்தியதால் நல்ல விலை கிடைத்துள்ளது,' என்றார்.

## வெற்றி திருவிழா! "வனத்துக்குள் திருப்பூர்' திட்டத்தின் வரும் 13ல் கோலாகல கொண்டாட்டம்



திருப்பூர்: இலக்கை தாண்டி மரக்கன்று நடப்பட்டதை தொடர்ந்து, "வனத்துக்குள் திருப்பூர்' திட்ட நிறைவு

விழா, திருப்பூர் வேலாயுதசாமி திருமண மண்டபத்தில், 13ல் நடக்கிறது. அன்றைய தினம், பசுமை பணியில் கரம் கோர்த்து செயலாற்றி வருவோருக்கு பாராட்டு தெரிவித்து, கவுரவிக்கப்பட உள்ளனர். வனங்களை பற்றிய விழிப்புணர்வு இல்லாமல், தொடர்ந்து அழித்து வருவதால், சுற்றுச்சூழல் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதனால், மரங்கள் வளர்ப்பதன் அவசியத்தை உணர்ந்த, மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், "ஒவ்வொருவரும் தங்களது வாழ்நாளில், குறைந்தது ஐந்து மரமாவது வளர்க்க வேண்டும்' என்ற விதையை விதைத்தார். அவரது கனவை நிறைவேற்றும் வகையில், "நம் மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்று நடுவது' என, தொழில் துறையினர், பொதுமக்கள் சபதம் ஏற்றனர். ஆக., 23ல், "வெற்றி' அமைப்பின் முயற்சியால், "வனத்துக்குள் திருப்பூர்' திட்டம் உதயமானது. பசுமை பணிக்கு என்றென்றும் தோள் கொடுக்கும், "தினமலர்' நாளிதழ், அவர்களோடு கரம் கோர்த்து, வாசகர்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தியது. தொழில் துறையினர், சேவை அமைப்புகள், பொதுமக்கள், பெண்கள், பள்ளி மாணவ - மாணவியர் என, பல தரப்பினரும் ஆர்வமாக முன்வந்து,திட்டத்தில் இணைந்தனர்.திருப்பூரில் "டிரீம் 20', விதைகள், ஸ்ரீபுரம் அறக்கட்டளை, தோழமை மக்கள் அமைப்பு, சர்வோதயா சங்கம், காங்கயத்தில் வேர்கள், தாராபுரத்தில் விழுதுகள், வெள்ளக்கோவிலில் நிழல்கள், "நிட் சிட்டி', பூண்டி, மேற்கு ரோட்டரி சங்கங்கள், மத்திய அரிமா சங்கம், பொது சுத்திகரிப்பு நிலையங்கள், தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டத்தில், 35 தொழில் நிறுவனங்கள் இணைந்தன. 15 தனியார் பள்ளி, கல்லூரிகள், மாவட்ட கல்வித்துறை, மாவட்ட, மாநகர போலீஸ், இந்து சமய அறநிலையத்துறை, பூமலூர், எல்லைப்பாளையம் உள்ளிட்ட ஊராட்சி அமைப்புகள் என, ஏராளமான அமைப்புகள் கரம் கோர்த்து, "இயற்கை வேள்வி'யாக இத்திட்டம் முன்எடுக்கப்பட்டது.

ஒரு லட்சம் மரக்கன்று என்ற இலக்கு, நவ., 10ல் எட்டப்பட்டது. இருப்பினும், தொடர்ந்து, மரக்கன்று நடும் பணி நடந்து வருகிறது. நேற்று வரை, 1.30 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் விழிப்புணர்வு

ஏற்படுத்தியுள்ளதால், பல பகுதிகளில், சேவை அமைப்புகள், பொதுமக்கள், இளைஞர்கள், மாணவர்கள் என, மரக்கன்று நடும் பணியில் களம் இறங்கியுள்ளனர். நடப்பட்டுள்ள மரக்கன்றுகளை தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் பராமரிக்க, 24 நிறுவனங்கள் டிராக்டர் வழங்கி, தலா, 15 லட்சம் ரூபாய் பராமரிப்பு செலவையும் ஏற்றுள்ளன. **நிறைவு விழா**

இத்திட்டத்தின் நிறைவு விழா, 13ல், திருப்பூர் - தாராபுரம் ரோடு, வேலாயுதசாமி திருமண மண்டபத்தில் நடக்கிறது. அன்று காலை, 9:00 முதல், 11:00 மணி வரை, முதல் அமர்வு. பெங்களூரு அருண் மாதவன் குழுவினரின், தெய்வீக இன்னிசை நிகழ்ச்சி மற்றும் தங்களது நிலங்களில் மரம் வளர்க்க முன்வந்த, பசுமை குடும்பங்களுக்கு பாராட்டு விழா நடத்தப்படுகிறது. தென்மண்டல சி.பி.சி.ஐ.டி., - எஸ்.பி., அமித்குமார் சிங், கோவை "சிறுதுளி' நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன் உள்ளிட்டோர் ங்கேற்கின்றனர்.

காலை, 11:00 முதல், மதியம், 1:00 மணி வரை இரண்டாவது அமர்வு. இரண்டு ஆண்டு பராமரிப்பு செலவை ஏற்றுக்கொண்டுள்ள தொழில் நிறுவன உரிமையாளர்கள், பசுமை அமைப்புகளுக்கு பாராட்டு விழா நடக்கிறது. அமைச்சர் ஆனந்தன், கலெக்டர் கோவிந்தராஜ், மாநகர போலீஸ் கமிஷனர் சேஷசாய், ஆனைமலை புலிகள் காப்பக கள இயக்குனர் கந்தசாமி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

## திருமூர்த்தி அணைக்கு வந்த நீர் வீணாகவில்லை! குளங்களுக்கு திருப்பி சேமிப்பு

வடகிழக்கு பருவமழையால், திருமூர்த்தி அணைக்கு, கிடைத்த நீர் வரத்து வீணடிக்கப்படாமல், கிராமப்புற குளங்களுக்கும், உப்பாறு அணைக்கும் திருப்பி விடப்பட்டுள்ளது. வறண்டு கிடந்த உப்பாறு அணை மற்றும் குளங்கள் வேகமாக நிரம்பி வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உடுமலை திருமூர்த்தி அணையிலிருந்து, பி.ஏ.பி., பாசன திட்டத்திலுள்ள, 3.77 லட்சம் ஏக்கர் நிலத்துக்கு, நான்கு மண்டலமாக தண்ணீர் வழங்கப்படுகிறது. தற்போது, நான்காம் மண்டல பாசன காலமாகும். இந்நிலையில்,

மேற்குத்தொடர்ச்சி மலையில், வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து, பாலாறு, மற்றும் நல்லாறு பகுதியிலிருந்து தண்ணீர் பாய்ந்தது. இதனால், அணைக்கு அதிக நீர் வரத்து கிடைத்தது. நான்காம் மண்டல பாசனத்துக்காக, பி.ஏ.பி., தொகுப்பு அணைகளிலிருந்து, திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் எடுக்கப்பட்டு, இருப்பு வைக்கப்பட்டிருந்த நிலையில், மழையால் கிடைத்த நீர் காரணமாக, அணை நிரம்பும் நிலையை அடைந்தது. கடந்த, 7ம் தேதி மொத்தமுள்ள, 60 அடியில், 57 அடியை நீர் மட்டம் எட்டியதும், அணையின் பாதுகாப்புக்காக, தண்ணீரை வெளியேற்ற வேண்டிய சூழல் உருவானது. மழை காரணமாக, பாசனப்பகுதிகளிலும் விவசாயிகள் அணையிலிருந்து தண்ணீர் திறப்பை ஒத்தி வைக்குமாறு, கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதையடுத்து, அணை நிரம்பி, உபரி நீர் பாலாறு வழியாக வெளியேறி வீணாவதை தடுக்க, விவசாயிகள் கோரிக்கை அடிப்படையில், உப்பாறு அணைக்கும், கிராமப்புற குளங்களுக்கும் தண்ணீர் திறக்க தீர்மானிக்கப்பட்டது.

திருமூர்த்தி அணையிலிருந்து பிரதான கால்வாயில், வினாடிக்கு, ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு, 46 கி.மீ., ல் உள்ள, அரசூர் ஷட்டர் வழியாக, தாராபுரம் தாலுகாவிலுள்ள, உப்பாறு அணைக்கு, 8 ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. நீர்பிடிப்பு பகுதிகள் அதிகளவு இல்லாததால், மொத்தமுள்ள, 24 அடியில், ஒரு அடி தண்ணீர் கூட இல்லாமலிருந்த உப்பாறு அணைக்கு, ஓராண்டு இடைவெளிக்கு பிறகு, பி.ஏ.பி., திட்டத்தின் மூலம் தண்ணீர் கிடைத்துள்ளது.

நேற்று காலை நிலவரப்படி, அரசூர் ஷட்டரிலிருந்து, 48 கி.மீ., துாரம் அமைந்துள்ள தடுப்பணைகள் நிரம்பி, உப்பாறு அணைக்கு வினாடிக்கு, 300 கன அடி நீர் வரத்து உள்ளது. மொத்தமுள்ள, 24 அடியில், 4.6 அடியாக நீர் மட்டம் உயர்ந்துள்ளது. குளங்களுக்கும் வரத்து

பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனப்பகுதியில், மழை பெய்ததால், மக்காச்சோளம் உட்பட பயிர்களுக்கு, தண்ணீர் தேவை குறைந்துள்ளது. கிளை வாய்க்கால்களில் இருந்து, குளங்களுக்கு தண்ணீர் திருப்பி விடப்பட்டுள்ளது.

குடிமங்கலம் ஒன்றிய பகுதியிலுள்ள, ஆறு குளங்கள் நிரம்பியுள்ளன. பிற குளங்களுக்கு தண்ணீர் திருப்பப்பட்டுள்ளது. ஏழு குள பாசன திட்டத்திலுள்ள குளங்களுக்கு, திருமூர்த்தி அணையிலிருந்து நேரடியாக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இக்குளங்கள் முழு கொள்ளளவை எட்டி வருகின்றன. பூசாரிநாயக்கன்குளம் உள்ளிட்ட குளங்களும், வேகமாக நிரம்பி வருகின்றன.

வடகிழக்கு பருவமழையால், திருமூர்த்தி அணைக்கு கிடைத்த தண்ணீர் வரத்தை வீணடிக்காமல், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தும் வகையில், குளங்களுக்கு தண்ணீர் திருப்பப்பட்டுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## செயற்கை கருவூட்டலில் 1.25 லட்சம் கன்று

திருப்பூர் : திருப்பூர் மாவட்டத்தில், 2014-15ல், செயற்கை கருவூட்டல் முறையில், 1.25 லட்சம் கன்று குட்டிகள் பெறப்பட்டுள்ளன.

கால்நடைகளை விருத்தி செய்ய, செயற்கை கருவூட்டல் முறை கையாளப்படுகிறது. கருவூட்டலில், காளை, பசுவோடு நேராக சேர்வதில்லை. ஒரு காளையின் விந்து சேகரித்து, ஒரு வாரத்துக்கு பல பசுக்களை கருத்தரிக்கச் செய்ய முடிகிறது. ஒரு காளை இயற்கை முறையில், ஒரு சமயத்தில், ஒரு பசுவை மட்டுமே கருத்தரிக்கச் செய்ய முடியும் என்றால், செயற்கை கருவூட்டலில், 200 பசுக்கள் வரை, கருத்தரிக்கச் செய்ய முடியும். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள, மூன்று லட்சத்து, 40 ஆயிரம் கால்நடைகளில், பசுக்கள் எண்ணிக்கை மட்டும், இரண்டு லட்சத்து, 30 ஆயிரம். கர்ப்பப்பை வளர்ச்சி, ஆரோக்கியத்துடன் கூடிய உடல் அமைப்பை பெறுவதற்கு, எல்லா சத்துக்கள் நிறைந்த தாதுஉப்புகள், பசுக்களுக்கு அளிக்கப்படுகின்றன. 2014-15ல், கால்நடை பராமரிப்பு துறை வாயிலாக, இரண்டு லட்சத்து, 51 ஆயிரம் கருவூட்டல் பணி மேற்கொண்டதில், 1.25 லட்சம் கன்று குட்டிகள் பிறந்துள்ளன. நடப்பாண்டு, ஏப்., முதல் நவ., முடிய,

ஒரு லட்சத்து, 41 ஆயிரம் கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு இணை இயக்குனர் வாசுதேவன் கூறுகையில்,""செயற்கை கரூவூட்டல் முறையில், 60 சதவீதம் வரை, கன்று குட்டிகளை பெற முடியும். 12 ஆயிரம் லிட்டர் பால் சுரக்கும் பசுக்களில், உறை விந்து மூலம் செயற்கை கருவூட்டல் செய்தால், 6,000 லிட்டர் பால் சுரக்கும் கன்றுகளை பெற முடியும்," என்றார்.

**கால்நடைகளுக்கு 40 டன் தீவனம்**

திருத்தணி:வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கால்நடைகளுக்கு, 40 டன் இலவச தீவனம் வழங்கும் நிகழ்ச்சி, நேற்று, திருத்தணியில் துவங்கியது.திருத்தணி கோட்டத்தில், ஒரு மாதமாக பெய்த கனமழையால், ஏரிகள் நிரம்பி வழிகின்றன. ஏரிகளில் இருந்து வெளியேறும் உபரிநீர், வயல்வெளியில் தேங்கி நிற்பதால், கால்நடைகள் தீவனம் கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றன.இதையடுத்து, கால்நடைகளை பாதுகாக்கும் வகையில், வெள்ளத் தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கால்நடைகளுக்கு இலவச தீவனம் (சோளம்) வழங்கப்படும் என, அரசு அறிவித்தது.

அதன்படி, திருத்தணி கோட்டத்தில், கால்நடை துறையின் மூலம், 40 டன் இலவச தீவனம் வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து, திருத்தணி கால்நடை மருத்துவர் தாமோதரன் கூறியதாவது:ஒரு மாதமாக பெய்த கனமழையால் திருத்தணி மற்றும் பள்ளிப்பட்டு தாலுகாவில், 20க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் கால்நடைகளுக்கு தீவனம் வசதியில்லை.முதற்கட்டமாக நேற்று, விருதுநகர் சாத்துார் ஆட்டுப்பண்ணையில் இருந்து, லாரியின் மூலம் ஏழு டன் சோளம் தீவனம் வரவழைக்கப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால்நடை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு, தேவையான தீவனம் இலவசமாக வழங்கப்படுகிறது. மொத்தம், 40 டன் தீவனம் வழங்கப்படவுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## 1,482 ஏக்கர் பயிர்கள் சேதம்:நிவாரணம் கோரி மனு

திருத்தணி;திருத்தணி ஒன்றியத்தில், ஒரு மாதமாக பெய்த கன மழையால், விவசாயிகள் பயிரிட்ட நெல், வேர்க்கடலை மற்றும் பருப்பு பயறு வகைகளான பயிர்கள், மொத்தம், 1,482 ஏக்கர் பயிர், மழைநீரில் மூழ்கியது. இதையடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் திருத்தணி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்து வருகின்றனர். நேற்று வரை, பாதிக்கப்பட்ட 1,000 விவசாயிகள், பயிருக்கு நிவாரணம் வழங்க கோரி மனு கொடுத்துள்ளனர்.

இதுகுறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:மழையால் சேதம் அடைந்த நெல் மற்றும் வேர்க்கடலைக்கு, ஒரு ஏக்கருக்கு 5,466 ரூபாயும், பயறு வகைகளுக்கு, ஒரு ஏக்கருக்கு, 3,000 ரூபாயும், அரசு, நிவாரணம் வழங்கவுள்ளது.தற்போது, 1,000 விவசாயிகள் மனு கொடுத்துள்ளனர். விவசாயிகள் கொடுத்த மனுக்கள் மீது அந்தந்த வேளாண்மை உதவி அலுவலர், கிராம நிர்வாக அலுவலர் ஆகிய இருவரும் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் சேதமடைந்த பயிர் வகைகளை பார்வையிட்டு உறுதி செய்த பின், அந்த மனுவை மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

மாவட்ட நிர்வாகம் நிவாரண தொகை வழங்கியவுடன், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரிடையாக வரவு வைக்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## வெள்ள பாதிப்பு குறித்து வேளாண் அதிகாரி ஆய்வு

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் ஒன்றியத்தில் வெள்ள பாதிப்புகளை, வேளாண் அதிகாரி பார்வையிட்டார். மேல்மலையனூர் ஒன்றியத்தில் தொடர்மழையால் ஏராளமான விவசாய நிலங்கள் பாதிக்கப் பட்டன. அவலூர்பேட்டை, வளத்தி, மேல்மலை யனூர், கன்னலம்,மேல்வைலாமூர், வடுகப்பூண்டி, கொடம்பாடி, கப்ளாம்பாடி உள்ளிட்ட 70 க்கும் மேற்பட்ட பகுதிகளில் சாகுபடி செய்திருந்த நெல், மணிலா, உளுந்து பயிர்கள் மழைநீரில் மூழ்கி, சேதமடைந்தது. இப்பகுதியில், மேல்மலையனூர் வேளாண் உதவி

இயக்குனர் பெரியசாமி மற்றும் வேளாண் உதவி அலுவலர்கள் நேரில் சென்று, விவசாய நிலங்களை பார்வையிட்டு, ஆய்வு செய்தனர்.

### முருக்கேரி பகுதியில் மீன் விற்பனை துவக்கம்

முருக்கேரி: திண்டிவனம், முருக்கேரி பகுதியில் கடந்த 15 நாட்களுக்கு பிறகு, நேற்று மீன் விற்பனை துவங்கியது. மரக்காணம் பகுதி கடலில் பிடிக்கும் மீன்கள் சிறுவாடி, ஆலங்குப்பம், பிரம்மதேசம், நல்லாளம், எண்டியூர், மன்னார்சாமி கோவில், திண்டிவனம் ஆகிய இடங்களில் உள்ள மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக அனுப்பி வருகின்றனர்.

மரக்காணம் பகுதியில் பெய்த கனமழையால் கடலோரத்தில் உள்ள மீனவ கிராமத்தை சேர்ந்த மீனவர்கள், கடந்த 15 தினங்களாக கடலுக்கு சென்று மீன் பிடிக்கவில்லை. இதனால் மரக்காணம், திண்டிவனம், முருக்கேரி பகுதியில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட மீன் மார்க் கெட்டுகள் வெறிச்சோடியது. தற்போது நேற்று முதல் மார்க்கெட்டுகளில் மீன்கள் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

### பருத்திப்பள்ளி ஏரி நிரம்பியது: விவசாயிகள் மகிழ்ச்சி

மல்லசமுத்திரம்: வடகிழக்கு பருவமழை காரணமாக, பல ஆண்டுகளுக்கு பின், பருத்திப்பள்ளி ஏரி நிரம்பியுள்ளது. இதனால், பாசன பரப்பு அதிகரிக்கும் என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சேலம் மாவட்டம், ஏற்காடு அடிவாரத்தில் துவங்கும் திருமணிமுத்தாறு சேலம் நகர், பூலாவரி, பாப்பாரப்பட்டி, கொன்னையார், மாணிக்கம்பாளையம், பரமத்தி வழியாக பாய்ந்து சென்று, காவிரி ஆற்றில் கலக்கிறது. நாமக்கல் மாவட்டம், வையப்பமலை அடுத்த அக்கரைப்பட்டியில், திருமணிமுத்தாறு பிரிகிறது. அவ்வாறு பிரியும் தண்ணீர், பாலமேடு, பருத்திப்பள்ளி, வண்டிநத்தம் ஏரிகளில் நிரம்புகிறது. அக்கரைப்பட்டியில் இருந்து கொன்னையாறு வரை பரந்து விரிந்துள்ள பருத்திப்பள்ளி ஏரி, 133 ஹெக்டேர் பரப்பளவும், 12 மதகுகளும்

கொண்டு அமைந்துள்ளது. ஏரியை நம்பி, 1,500 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. கடந்த சில ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், ஏரி நீரின்றி வறண்டது. அதனால், பாசன பரப்பளவு குறைந்தது. தற்போது பெய்த மழையால் ஏரி நிரம்பி, பாசன பரப்பும் அதிகரிக்கும் என்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 980 மண் மாதிரிகள் ஆய்வு: வேளாண்மை அதிகாரி தகவல்

கோபிசெட்டிபாளையம்: தேசிய அளவில் இந்தியா முழுவதும், மூன்றாண்டுகளில், லட்சக்கணக்கான சாகுபடி பரப்பு முழுவதிலும், மண் மாதிரிகளை எடுத்து, ஆய்வு செய்து, விவசாயிகளுக்கு உரப் பரிந்துரை அளிக்கும் மாபெரும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இதன்படி கோபி நம்பியூர் வேளாண்மை துறை சார்பில், வேமாண்டம்பாளையத்தில் உலக மண்வள தினவிழா கொண்டாடப்பட்டது. இதன்படி, நம்பியூர் வட்டாரத்தில், 18 ஆயிரம் ஏக்கர் சாகுபடி பரப்பளவில், ஒன்பது வருவாய் கிராமங்களில், 980 மண் மாதிரி எடுக்கப்பட்டுள்ளது. இவை ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுகள் தனித்தனியாக நிரந்தர அட்டை மூலம் விநியோகிக்கப்படும் என்றும், விழாவில் தெரிவிக்கப்பட்டது. விழாவில், வேமாண்டாம்பாளையம் பஞ்சாயத்து தலைவர் வசந்தாமணி விவசாயிகளுக்கு மண் அட்டை வழங்கினார். வேளாண்மை அலுவலர் பிரியா மண் மாதிரி அவசியத்தை எடுத்துக் கூறினார்.

## பசுந்தேயிலைக்கு கொப்புள நோய் சிறு விவசாயிகள் கவலை

கோத்தகிரி: கோத்தகிரி பகுதி தேயிலை தோட்டங்களில் கொப்புள நோய் தாக்கி வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக இடைவிடாது மழைப்பெய்து வருகிறது. வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. பொதுவாக, தேயிலை தோட்டங்களில் இலையில் துளிர்விட, சூரிய வெளிச்சம் தேவை. கடந்த, 15

நாட்களுக்கு மேலாக, சூரியன் தென்படாமல் உள்ளதால், இலைகளில் கொப்புள நோய் தாக்கி வருகிறது. கோத்தகிரியில் உள்ள பல தோட்டங்களில் இந்த நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. மகசூலும் வெகுவாக குறைந்துவருகிறது. ஏற்கனவே, விலை வீழ்ச்சியால், சிரமங்களை சந்தித்துவரும் விவசாயிகளுக்கு, இந்நோய் பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளது. மழை தொடர்ந்து, இதன் பாதிப்பு அதிகரிக்கும் சூழல் உள்ளது.

**சம்பா சாகுபடியில் விவசாயிகள் மும்மரம்: இலக்கை மிஞ்சும் வாய்ப்பால் மகிழ்ச்சி**




கரூர்: காவிரி, அமராவதி ஆற்றில் தண்ணீர் ஓடுவதால், சம்பா சாகுபடியில் விவசாயிகள் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றனர். இலக்கை விட பயிரிடும் பரப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால், வேளாண்துறையினர் மகிழ்ச்சியில் உள்ளனர்.

மேட்டூர் அணை மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை, நாகை, கடலூர், அரியலூர் ஆகிய மாவட்டங்களில், 16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. தென்மேற்கு பருவமழை காரணமாக காவிரி நீர் பிடிப்பு பகுதியில் ஓரளவு மழையால், கர்நாடகா அணையிலிருந்து உபரிநீர் மேட்டூர் அணைக்கு திறந்த

விடப்பட்டது. இதையடுத்து அணையின் நீர்மட்டம், 94 அடி இருந்த நிலையில் ஆகஸ்ட், 9ம் தேதி காவிரி பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. மேட்டூர், அமராவதி அணையில் நீர் இருப்பு குறைவாக இருந்த காரணத்தால், நெல் பயிரிட தாமதமாக துவங்கினர். இருப்பினும் தமிழகத்தில் ஒரு மாதத்திற்கு மேலாக பருவமழை கொட்டி தீர்த்துள்ளது. சம்பா பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது மேட்டூர் அணையில், 96 அடி தண்ணீர் இருப்பு உள்ளது. மேலும் அமராவதி அணை நிரம்பி உபரி நீர் திறந்து விடப்படுகிறது. எனவே, மாவட்டத்தில் விவசாயிகள் சம்பா சாகுபடியில் மும்மரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து, வேளாண் உதவி இயக்குநர் சிவானந்தம் கூறியதாவது: கடந்த ஆண்டு சம்பா சாகுபடி, 13 ஆயிரத்து 684 ஹெக்டேர் பரப்பில் நடந்தது. நடப்பாண்டு, 14 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி அளவு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மிகவும் தாமதமாக சாகுபடி துவங்கிய போதும், காவிரி, அமராவதி ஆற்றில் போதுமான தண்ணீர் ஓடுவதால் நம்பிக்கையுடன் விவசாயிகள் சம்பா சாகுபடி மேற்கொண்டு வருகின்றனர். இதுவரை, 12 ஆயிரத்து 322 ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி நடந்துள்ளது. அமராவதி அணையில் நீர் திறக்கப்பட்டுள்ள நிலையில், அரவக்குறிச்சி, க.பரமத்தி சுற்று வட்டார பகுதிகளில் சாகுபடி துவங்கி உள்ளதால், இலக்கை விட சாகுபடி அளவு மிஞ்சும் வாய்ப்பு உள்ளது. பருவமழையால் பூச்சி தாக்குதலில் இருந்து தப்பிக்க, வேளாண் அலுவலர்களின் ஆலோசனை பெற்று மருந்துகளை தெளிக்க வேண்டும். இதன்மூலம் மகசூல் குறைவிலிருந்து தப்பிக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஆடுகளை தாக்கும் நீலநாக்கு நோய்: தடுப்பு முறைகள் குறித்து விளக்கம்

செம்மறி ஆடுகளை தாக்கும் நீலநாக்கு நோய் அறிகுறிகள், தடுப்பு முறைகள் குறித்து கரூர் மண்டல கால்நடை பராமரிப்பு துறை தெரிவித்துள்ளது.

கரூர் மாவட்டத்தில், செம்மறி ஆடுகளை நீல நாக்கு நோய் தாக்கும் அபாயம் உள்ளது. இதை தடுக்கும் முறைகள் குறித்து, கரூர் மண்டல கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் பழனிவேல், உதவி இயக்குனர் முருகேசன் ஆகியோர் கூறியதாவது: செம்மறி ஆடுகளை, நோய் கூலிகாய்ட்ஸ் என்ற சிறு ஈக்கள் கடிக்கும்போது நோயுள்ள ஆட்டிலிருந்து மற்ற ஆடுகளுக்கு பரவுகிறது. நோய் தாக்கிய ஆடுகளுக்கு, காய்ச்சல், மூக்கில் சளி வருதல், வாய் உதடுகள், ஈறுகள், நாக்கு ஆகிய இடங்களில் புண் உண்டாகும். ரத்த ஓட்டம் காரணமாக நாக்கு அதிக சிவப்பு நிறத்துடன் காணப்படும். பின் நீல நிறமாக மாறும். வாயில் உள்ள புண்களுக்கு உப்பு கலந்த தண்ணீர் அல்லது ஒரு கிராம் பொட்டாசியம் பர்மாங்கனேட் கலந்த நீரில், ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை கழுவ வேண்டும். புண்களுக்கு கிளிசரின் தடவலாம். கூலிகாய்ட்ஸ் ஈக்கள் மாலை, 5 முதல், 8 மணி வரை ஆடுகளை கடிக்கும். இந்நேரத்தில் பட்டிகளில் புகை மூட்டம் போட வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

### பயிர் பாதுகாப்பு மேலாண் பயிற்சி

ராமநாதபுரம்:போகலூர் வேளாண் வட்டார விரிவாக்க சீரமைப்பு திட்டம் சார்பில் எஸ்.கொடிக்குளம் கிராமத்தில் நெல் ஒருங்கிணைந்த பயிர் மேலாண் பண்ணை பயிற்சி நடந்தது. விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் குறித்து "அட்மா' துணை திட்ட இயக்குனர் உதுமான் முகைதீன், கோடை உழவு பயன்கள், நீர்பாசன முறைகள் குறித்து வேளாண் <உதவி இயக்குனர் சுருளிமலை பேசினர். பூச்சி, நோய் தாக்குதல், பயிர் மேலாண்மை குறித்து கடலோர உவர் ஆராய்ச்சி நிலைய <உதவி பேராசிரியர் ராஜமாணிக்கம், உழவியல் தொழில் நுட்பம் குறித்து துணை வேளாண் அலுவலர் முருகன், நெல்லில் உயிர் உர விதை நேர்த்தி குறித்து வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, பூஞ்சாண விதைநேர்த்தி பற்றி உதவி தொழில்நுட்ப மேலாளர் சொர்ணகுமார் விளக்கம் அளித்தனர். உதவி தொழில்<நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார்.

**பழக்கன்று நடவுப்பணி**

ராமநாதபுரம்;கமுதி வட்டாரத்தில் ஒருங்கிணைந்த நீர் வடிப் பகுதியின் கீழ் கீழமுடி மன்னார் கோட்டை, மேல முடி மன்னார் கோட்டை, ராமசாமிபட்டி, என்.கரிசல்குளம், மண்டலமாணிக்கம், நாராயணபுரம், அ.தரைக்குடி, வங்காருபுரம் கிராமங்களில் மரக்கன்றுகள் நடவுப்பணி நடந்தது.

ஒட்டு ரக மா, சப்போட்டா, நெல்லி பழக்கன்றுகள், புளி, வேம்பு, தேக்கு, சவுக்கு, மரக்கன்று வழங்கப்பட்டன. ராமநாதபுரம் வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, துணை இயக்குனர் ராஜாராம் அறிவுறுத்தல்படி நீர் வடிப்பகுதி அணி உறுப்பினர்கள் முருகானந்தம், மனோகரன், செந்தில்குமார், மயில்வாகனன், செல்வராணி ஆகியோர் நடவு பணிகளை

கண்காணித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள்-பழங்கள் விற்பனை மந்தம் விலை குறைந்தும் வாங்க கூட்டம் இல்லை



சென்னை,

மக்கள் சொந்த ஊருக்கு படையெடுத்ததால், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள்-பழங்கள் விற்பனை மந்தமாக உள்ளது. விலை குறைந்தும் வாங்க கூட்டம் இல்லாத நிலை காணப்படுகிறது. வெள்ளம் ஏற்படுத்திய தாக்கம் சென்னை நகரை புரட்டி போட்ட மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த வெளி மாநிலங்கள், மாவட்டங்களை சேர்ந்தவர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதுவரையில் 4 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் சென்னை நகரை விட்டு தற்காலிகமாக வெளியேறி இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் நகரின் பெரும்பாலான இடங்கள் வழக்கமான பரபரப்பின்றி

காணப்படுகிறது. காய்கறிகள், மளிகை பொருட்கள் விற்பனை அப்பகுதிகளில் முடங்கி உள்ளது. சில்லறை வியாபாரிகளும், பொதுமக்களும் அதிகளவில் வராததால் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிலும் காய்கறிகள், பழங்கள், பூக்கள் விற்பனை மந்தமாக உள்ளது. வெளி மாநிலங்கள்-மாவட்டங்களில் இருந்து வரத்து குறைவாக இருந்தாலும், மக்கள் கூட்டம் வெகுவாக குறைந்துள்ளதால் காய்கறிகள் விலை ஏறுமுகத்தில் செல்லாமல் இறங்குமுகத்தில் காணப்படுகிறது. விலை நிலவரம் கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் தக்காளி, புடலங்காய், முள்ளங்கி, வெண்டைக்காய் போன்ற காய்கறிகள் விலை பாதிக்கு பாதி குறைந்துள்ளது. கோயம்பேடு மொத்த காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய விலை நிலவரம் வருமாறு:-(1 கிலோ) தக்காளி ரூ.20 முதல் ரூ.25 (கடந்த வாரம் ரூ.50), வெங்காயம்-ரூ.35, சாம்பார் வெங்காயம்-ரூ.60, பீன்ஸ்-ரூ.60, அவரைக்காய்-ரூ.100, கேரட்-ரூ.35, கத்திரிக்காய்-ரூ.55, வெண்டைக்காய்- ரூ.45, கோவைக்காய்-ரூ.50, காளி பிளவர்-ரூ.30, இஞ்சி ரூ.40, முருங்கைக்காய்-ரூ.100, பீட்ரூட்-ரூ30, புடலங்காய் ரூ.50, பச்சை மிளகாய்-ரூ.25, உருளைக்கிழங்கு-ரூ.25, முட்டை கோஸ்-ரூ.20, பாகற்காய்-ரூ.40.

மொத்த விலையை விட சில்லறை விலையில் ஒவ்வொரு காய்கறி வகைகளும் இடத்துக்கு ஏற்றாற்போல் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.20 வரை கூடுதல் விலையில் விற்பனை செய்யப்படுகிறது. பழ வகைகள் வரத்தும் குறைந்திருந்தாலும், அவற்றின் விலை உயராமல் சராசரியான விலையிலேயே விற்பனை செய்யப்படுகிறது. கறிவேப்பிலை கிடைக்குமா? சென்னை கோயம்பேடு கறிவேப்பிலை வியாபாரிகள் கறிவேப்பிலை கொள்முதல் விலையை கிலோவுக்கு 10 ரூபாய் குறைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் ஆந்திர மாநிலம் தாதிபத்திரியில் இருந்து 40 லாரிகள் மூலம் கொண்டு வரப்பட்ட கறிவேப்பிலை தேக்கமடைந்துள்ளது. வியாபாரிகள் வேலைநிறுத்தத்தால் காய்கறிகளுடன் இனாமாக வழங்கப்படும் கறிவேப்பிலையை, இனி காசு கொடுத்து வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

**மழைவெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கு உணவு தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர் வழங்கினர்**




சென்னையில் மழை வெள்ளம் பாதித்த பகுதிகளில் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சையும், உணவு வழங்கும் பணியில் 'பீப்பிள் பார் கேட்டில் இன் இந்தியா' அமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தாம்பரம், வேளச்சேரி, ராமபுரம், வியாசர்பாடி, கோட்டூர்புரம், கே.கே.நகர், முடிச்சூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு கால்நடை மருத்துவர்களுடன் சென்று அடிப்பட்ட 300 கால்நடைகள், 100 நாய்கள், 50 பூனைகளுக்கு சிகிச்சை அளித்துள்ளனர்.

இதுதவிர 10 ஆயிரம் விலங்குகளுக்கு நோய்கள் வராமல் தடுக்கும் புதிதாக தயாரிக்கப்பட்ட விஷேச உணவுகள், உலர்ந்த பழங்கள், தீவனங்கள், புல் கட்டுகள் அளித்துள்ளனர். தொடர்ந்து பல்வேறு பகுதிகளுக்கு சென்று வரும் இந்த அமைப்பினருடன், டெல்லி, பெங்களூரில் இருந்து வந்துள்ள இந்திய வனவிலங்குகள் அறக்கட்டளையினர், அகில உலக வனவிலங்குகள் நிதி அமைப்பினர் மற்றும் அவசர நிவாரண உதவி அளிக்கும் நெட்ஒர்க் அமைப்பினரும் இணைந்து இந்த பணியில் ஈடுபட்டு உள்ளனர். கால்நடைகள்

பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் 98415-88852 மற்றும் 95001-49181 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகவல் அளித்தால் கால்நடை மருத்துவர்களுடன் சென்று சிகிச்சை அளிக்கப்படும். மேற்கண்ட தகவலை அமைப்பு நிறுவனர் அருண் பிரசன்னா தெரிவித்து உள்ளார்.

## செடிகளிலேயே வெடித்து வீணாகும் காபி பழங்கள் விவசாயிகள் வேதனை



பெரும்பாறை,

தாண்டிக்குடி மலைப்பகுதியில் செடிகளில் இருந்து காபி பழங்கள் வெடித்து சிதறுவதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். காய்கறி செடிகள் திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி, பெரும்பாறை, மஞ்சள்பரப்பு, கொங்கப்பட்டி, பண்ணைக்காடு, பூலத்தூர், கும்பரையூர், மங்களம்கொம்பு, குப்பம்மாள்பட்டி, கே.சி.பட்டி, பெரியூர், பாச்சலூர், ஆடலூர், பன்றிமலை போன்ற கீழ்பழனி மலைப்பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக பலத்த மழை பெய்து வருகிறது. அந்த பகுதியில் அதிக அளவில் காபி, மிளகு, வாழை, அவரை, பீன்ஸ், சவ் சவ், அவகோடா உள்ளிட்டவை சாகுபடி செய்யப்பட்டு

வருகிறது. இந்த பகுதியில் பெய்து வரும் மழையினால் காய்கறி செடிகள் முழுவதும் தண்ணீரில் மூழ்கி அழுகிய நிலையில் உள்ளன. அத்துடன் அவற்றில் இருந்த காய்கள் மற்றும் பூக்கள் உதிர்ந்து வீணாகி வருகின்றன. வெடித்து விழுகின்றன இதற்கிடையே அந்த பகுதியில் தற்போது காபி பழங்களின் சீசன் தொடங்கியுள்ளது. ஆனால் தொடர்ந்து மழை பெய்து வருவதால் செடிகளில் இருந்து காபி பழங்களை விவசாயிகளால் பறிக்க முடியவில்லை. இந்தநிலையில் பறிக்காமல் விடப்பட்ட காபி பழங்கள் தற்போது செடிகளிலேயே வெடித்து கீழே விழுகின்றன. அவற்றில் இருக்கும் காபி கொட்டைகள் வீணாவதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு ஒரு கிலோ காபி கொட்டைகளை விவசாயிகள் ரூ.170 முதல் ரூ.220 வரை விற்பனை செய்தனர். ஆனால் இந்த ஆண்டு அதன் விலை குறைந்து ஒரு கிலோ ரூ.140 வரை மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது.

விவசாயிகள் அவதி : இதற்கிடையே செடிகளில் இருந்து காபி பழங்களை பறிப்பதற்கு நபர் ஒருவருக்கு ஒரு நாள் கூலியாக ரூ.175 முதல் ரூ.200 வரை கொடுக்கப்படுகிறது. இந்த பழங்களை பறித்து, எந்திரம் மூலம் அவற்றின் சதைப்பகுதிகளை நீக்கி விட்டு கொட்டைகளை பிரித்து எடுக்கிறார்கள். பின்னர் அவற்றை அரைத்து வெயிலில் உலர வைத்து விற்பனை செய்கிறார்கள். ஆனால் தற்போது தொடர்ந்து மழை பெய்து வருவதால் காபி பழங்களை செடிகளில் இருந்து பறிக்க முடியாமலும், பறித்த பழங்களில் இருந்து கொட்டைகளை பிரித்தெடுத்து அரைத்து உலர வைக்க முடியாமலும் விவசாயிகள் அவதி அடைந்து வருகின்றனர்.

## 10 ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கின விவசாயிகள் கவலை



வேதாரண்யத்தில் பெய்த கனமழையால் 10 ஆயிரம் ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கனமழை

வேதாரண்யம் தாலுகாவில் நேற்று முன்தினம் ஒரே நாளில் பெய்த கனமழையால் 10 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த சம்பா நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. மேலும் வளவனாற்றில் 2 இடங்களில் உடைப்பு ஏற்பட்டதால் அப்பகுதியில் உள்ள வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வளவனாற்றில் ஓந்தி தேவன்காட்டில் உள்ள மரப்பாலம் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டது. இதனால் தென்னடார் பஞ்சநதிக்குளம் செல்லும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வேதாரண்யத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குளங்கள் நிரம்பின

தொடர் மழையால் தாலுகாவில் உள்ள ஏரி, குளங்கள் நிரம்பி வழிகின்றன. ஆற்றில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக குடியிருப்பு மற்றும் வயல்களில் தேங்கியுள்ள வெள்ளநீரை வடியவைக்கும் பணியில் பொதுமக்களும்,

அரசுதுறை அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர். வேதாரண்யம் தாலுகாவில் பெய்த கனமழையினால் 102 ஆடுகளும், 12 மாடுகளும், 6 கன்றுகளும் இறந்துள்ளன எனவும், முழுமையாக 19 வீடுகளும், பகுதியாக 25 வீடுகளும் சேதமடைந்துள்ளதாக வேதாரண்யம் தாசில்தார் தெரிவித்தார்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் மழை: பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டுகோள்




தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் செல்லதுரை ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

தமிழக அரசு சமீபத்தில் பெய்த தொடர் மழையினால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணம் எக்டேர் ஒன்றுக்கு ரூ.7 ஆயிரத்து410 அறிவித்திருக்கிறது. ஏக்கராக கணக்கிட்டு பார்த்தால் ஒரு ஏக்கருக்கு ரூ.3ஆயிரம் கூட கிடைக்கவில்லை. பெரம்பலூர் மாவட்டத்தில் பணப்பயிர்களான சின்னவெங்காயம் 18ஆயிரம்

எக்டேரும், மக்காச்சோளம் 28 ஆயிரம் எக்டேரும், பருத்தி 24 ஆயிரம் எக்டேரும் பயிரிடப்பட்டுள்ளது. இதில் சின்ன வெங்காயம் பயிரிடுவது தமிழகத்திலேயே பெரம்பலூர் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. மேற்படி மூன்று முக்கிய பணப்பயிர்களும் பயிரிடுவதற்கு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை விவசாயிகள் செலவு செய்துள்ளனர். இந்தநிலையில் அரசின் மழைவெள்ளநிவாரண அறிவிப்பு தொடர் மழையால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தையும், வேதனையையும் அளித்துள்ளது. அரசு அறிவித்த நிவாரணம் ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரம் என்பது உழவு, சாகுபடி செய்த கூலிக்கு கூட பத்தாது என்பதால் தமிழக அரசு மறு பரிசீலனை செய்து நிவாரண தொகையை ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தொடர்மழையின் காரணமாக சாகுபடி செய்யப்பட்டு உள்ள கரும்புகள் சாய்ந்தன



தொடர் மழையின் காரணமாக புதுக்கோட்டை அருகே சிறுஞ்சுனை பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள கரும்புகள் அனைத்தும் சாயந்து உள்ளன.

இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். கரும்புகள் சாய்ந்தன

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒரு சில குளங்களை தவிர பெரும்பாலான குளங்கள் அனைத்தும் நிரம்பி உள்ளன.

அன்னவாசல் ஒன்றியம் திருவேங்கைவாசல் ஊராட்சி சிறுஞ்சுனை பகுதியில் பயிர் செய்யப்பட்டு உள்ள சுமார் 5 ஏக்கருக்கும் மேற்பட்ட கரும்புகள் தொடர் மழையினால் சாய்ந்து சேதமடைந்து உள்ளன. இந்த கரும்புகள் அனைத்தும் பொங்கல் பண்டிகைக்கு அறுவடை செய்யப்படுபவை ஆகும். இதனால் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டு உள்ளது. விவசாயிகள் கவலை இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், மழையால் பொங்கலுக்கு அறுவடை செய்ய வேண்டிய கரும்புகள் சாய்ந்து விட்டன. இதனால் எங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. கரும்பை விளைவிப்பதற்காக கடன் வாங்கி செலவு செய்தோம். சரியான முறையில் அறுவடை செய்து விற்பனை செய்து இருந்தால் நாங்கள் வாங்கிய கடனையாவது திருப்பி கொடுத்து இருபோம்.

ஆனால் தற்போது கரும்புகள் சாய்ந்து கிடப்பதால் வாங்கிய கடனை எவ்வாறு திருப்பி செலுத்துவது என்று தெரியவில்லை. சாகுபடி செய்யப்பட்ட கரும்புகள் அனைத்தும் சாயாமல் இருந்திருந்தால் நாங்கள் செலவு செய்த பணத்தையாவது எடுத்து இருப்போம். மாவட்ட அதிகாரிகள் எங்கள் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு சாய்ந்து கிடக்கும் கரும்புகளை கணக்கெடுத்து எங்களுக்கு நிவாரண தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## காட்டாற்று வெள்ளம் வயல்களுக்குள் புகுந்தது தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 2,722 எக்டேர் சம்பா சாகுபடி பாதிப்பு



தஞ்சை மாவட்டம் மதுக்கூர் அருகே காட்டாற்று வெள்ளம் வயல்களுக்குள் புகுந்ததால் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 2 ஆயிரத்து 722 எக்டேர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளன.

வடகிழக்குப்பருவமழை : தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த சில நாட்களாக கொட்டித்தீர்த்தது. தஞ்சை மாவட்டத்தில் கடந்த மாதம் 30-ந்தேதி முதல் நேற்று முன்தினம் வரை மழை பெய்தது. தஞ்சையில் நேற்று காலை முதல் மழை இன்றி வெயில் காணப்பட்டது. அவ்வப்போது லேசான தூறலும் காணப்பட்டது. இந்த நிலையில் மாலை 5.15 மணி அளவில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. சுமார் 15 நிமிடம் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தஞ்சை மாவட்டம் மதுக்கூர் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக கண்ணனாறு நிரம்பி வழிகிறது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பெய்த மழைநீர் காட்டாற்று வெள்ளமாக இந்த பகுதிக்கு அதிக அளவில் வருவதால் ஆங்காங்கே கண்ணனாற்று கரைகளை தாண்டி நீர் வயல்களுக்குள் புகுந்தன. மேலும் அங்குள்ள

தரைப்பாலத்தை மூழ்கடித்து காட்டாற்று வெள்ளம் வயல்களுக்குள் புகுந்ததால் சொக்கனாவூர், சிரமேல்குடி, புளியக்குடி பகுதியில் மட்டும் 1,095 எக்டேர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. பேராவூரணி பகுதியில் மேலும் 50 எக்டேர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. 2,722 எக்டேர் பாதிப்பு தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாடு, திருவையாறு, பூதலூர், கும்பகோணம், திருவிடைமருதூர், மதுக்கூர், திருப்பனந்தாள், பேராவூரணி, பாபநாசம், தஞ்சாவூர், அம்மாப்பேட்டை, பட்டுக்கோட்டை பகுதிகளில் என இதுவரை 2 ஆயிரத்து 722 எக்டேர் நெற்பயிர்கள் மூழ்கி உள்ளன. மேலும் ஒரத்தநாடு பகுதியில் 1 எக்டேர் அளவில் மக்காச்சோளபயிர்களும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன.

தஞ்சை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழைக்கு இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர். 349 கால்நடைகள் இறந்துள்ளன. மேலும் 76 வீடுகள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளன. 1,225 வீடுகள் பகுதி அளவில் சேதம் அடைந்துள்ளன. மழை அளவு தஞ்சை மாவட்டத்தில் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:- அதிராம்பட்டினம் 0.2, கும்பகோணம் 5, பாபநாசம் 9.2, தஞ்சாவூர் 1, திருவையாறு 15, திருக்காட்டுப்பள்ளி 3, கல்லணை 0.4, அய்யம்பேடடை 27, திருவிடைமருதூர் 1.4, மஞ்சளாறு 1.6, பூதலூர் 1.4, மதுக்கூர் 7, பட்டுக்கோட்டை 2.5, அணைக்கரை 12.8, குருங்குளம் 3.

## வடகிழக்கு பருவமழை காரணமாக காவிரி டெல்டா பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் 10 அடி உயர்ந்தது




வடகிழக்குப்பருவமழை காரணமாக காவிரி டெல்டா பகுதியில் சராசரியாக நிலத்தடி நீர் மட்டம் 10 அடி

உயர்ந்துள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்கள் காவிரி டெல்டா மாவட்டங்களாக தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள் விளங்கி வருகிறது. இந்த மாவட்டங்களில் நெல் சாகுபடி மட்டும் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். இந்த சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படும். ஆற்றுப்பாசனத்தை தவிர்த்து ஆழ்குழாய் கிணறு மூலமும் சாகுபடி நடைபெறும். இந்த மாவட்டங்களில் கடந்த 3 ஆண்டுகளாக மழை சரிவர இல்லாததால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து காணப்பட்டது. 31 மீட்டருக்கு குறைவு அதாவது தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டத்தை பொருத்தவரை சராசரியாக 31 மீட்டருக்கும் கீழ் தான் இருந்தது. வடகிழக்குப்பருவமழை காலத்தில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயரும்.

இந்த ஆண்டு தமிழகத்தில் வடகிழக்குப்பருவமழை கடந்த அக்டோபர் மாதம் 28-ந்தேதி தொடங்கியது. அன்று முதல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. குறிப்பாக சென்னை, காஞ்சீபுரம், கடலூர், திருவள்ளூர், நாகை, திருவாரூர், தஞ்சை, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பலத்த மழை கொட்டியது. 10 அடி உயர்வு சுமார் 40 நாட்களுக்கும் மேலாக மழை பெய்து வருகிறது. இதனால் காவிரி டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. காவிரி டெல்டா மாவட்டங்களில் சராசரியாக ஆண்டுக்கு 942 மில்லி மீட்டர் மழை பெய்ய வேண்டும். ஆனால் இந்த ஆண்டு சராசரியை விட அதிக அளவு மழை பெய்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் நேற்று வரை 1,103 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இது சராசரியை விட 161 மில்லி மீட்டர் மழை அதிகமாக பெய்துள்ளது.

இதே போல் திருவாரூர், நாகை மாவட்டங்களில் சராசரி அளவை விட கூடுதலாக பெய்துள்ளது. இதே போல் இந்த மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டமும் கடந்த 1 மாதத்தில் மட்டும் 3 மீட்டருக்கும் அதிகமாக அதாவது 10 அடிக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. 25 நாளில் 3 மீட்டர்

கடந்த மாதம் நவம்பர் 10-ந்தேதி முதல் இந்த மாதம் (டிசம்பர்) 5-ந்தேதி வரை கண்கெடுக்கப்பட்டதின் அடிப்படையில் இந்த நீர் மட்டம் உயர்ந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 17 திறந்த வெளிக்கிணறு மற்றும் 46 ஆழ்குழாய் கிணறுகளின் மூலம் ஆய்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் இந்த நீர் மட்டம் உயர்ந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் 25 நாட்களில் மட்டும் 3.27 மீட்டர் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இந்த உயர்வு திறந்தவெளிக்கிணறுகளில் 24 சதவீதமும், ஆழ்குழாய் கிணறுகளில் 26 சதவீதமும் ஆகும்.

இதே போல் திருவாரூர் மாவட்டத்தில் 7 திறந்தவெளிக்கிணறு மற்றும் 19 ஆழ்குழாய் கிணறுகளின் மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் நிலத்தடி நீர் மட்டம் 3.44 மீட்டர் உயர்ந்துள்ளது. இந்த உயர்வு திறந்த வெளிக்கிணறுகளில் 62 சதவீதமும், ஆழ்குழாய் கிணறுகளில் 38 சதவீதமும் ஆகும்.

நாகை மாவட்டத்தில் 14 திறந்தவெளிக்கிணறு மற்றும் 16 ஆழ்குழாய் கிணறுகள் மூலம் ஆய்வு செய்யப்பட்டதில் நிலத்தடி நீர் மட்டம் 3.15 மீட்டர் உயர்ந்துள்ளது. இந்த உயர்வு திறந்தவெளிக்கிணறுகளில் 38 சதவீதமும், ஆழ்குழாய் கிணறுகளில் 36 சதவீதமும் உயர்வு ஆகும். இன்னும் உயரும்

குறிப்பாக ஒவ்வொரு மாதமும் 10-ந்தேதிக்குள் நீர் மட்டத்தின் தன்மை குறித்து அதிகாரிகள் கணக்கெடுத்து அரசுக்கு அறிக்கை அனுப்புவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு வடகிழக்குப்பருவமழையினால் 25 நாட்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 3 மாவட்டங்களிலும் 3 மீட்டருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. இன்னும் நீர் மட்டம் உயரும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**இயல்பு நிலை திரும்பி வருகிறது வயல்களில் தேங்கிய தண்ணீர் வடிவதால் விவசாயிகள் நிம்மதி**




திருவாரூரில் மழை ஓய்ந்ததால் இயல்பு நிலை திரும்பி வருகிறது. வயல்களில் தேங்கிய தண்ணீர் வடிவதால் விவசாயிகள் நிம்மதி அடைந்து வருகின்றனர்.

பருவ மழை : திருவாரூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை கடந்த ஆண்டைவிட கூடுதலாக பெய்தது. இதனால் பல இடங்களில் குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் சூழ்ந்தது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் 13 நிவாரண முகாம்கள் திறக்கப்பட்டுள்ளது. இங்கு பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 மக்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து சாலைகளும் மிகவும் பழுதடைந்து குண்டும், குழியுமானதால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர். இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன.

தொடர்மழையினால் கட்டுமான தொழில் உள்பட அனைத்து தொழில்களும் பாதிக்கப்பட்டன. இதனால் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பை இழந்தனர்.

அனைத்து பணிகளும் பாதிக்கப்பட்டது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு அடைந்தது. திருவாரூர் மாவட்டத்தில் 69 ஆயிரம் எக்டேர் சம்பா நெற் பயிர்கள் நீரில் மூழ்கியது. இதனால் பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்தனர். இயல்பு நிலை

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் முதல் மழை ஓய்ந்தது. நேற்று வெயில் அடிக்க தொடங்கியது. இதனால் திருவாரூரில் இயல்பு நிலை திரும்பி வருகிறது. மேலும் வயல்களில் தேங்கிய தண்ணீர் வடிய தொடங்கி உள்ளதால் விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர்.

## 62 ஆயிரத்து 413 எக்டேர் சம்பா நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன அமைச்சர் காமராஜ் தகவல்




திருவாரூர் மாவட்டத்தில் 62 ஆயிரத்து 413 எக்டேர் சம்பா நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன என்று அமைச்சர் காமராஜ் கூறினார்.

ஆலோசனை கூட்டம் திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் முன்னிலை வகித்தார். கூட்டத்திற்கு அமைச்சர் காமராஜ் தலைமை தாங்கினார். பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:- திருவாரூர் மாவட்டத்தில் வெள்ள தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள 7 குழுக்கள் அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு பாதிப்பு அடைந்தவர்களுக்கு போர்கால அடிப்படையில் நிவாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மழைநீர் தேங்கிய பகுதிகளில் தண்ணீர் வடிவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆறு, வாய்க்காலிீல் தண்ணீர் பாசனத்திற்கு இடையூறாக உள்ள ஆகாயதாமரை, காட்டாமணக்கு ஆகியவை அகற்றப்பட்டு தங்கு தடையின்றி தண்ணீர் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 13 நிவாரண மையங்கள் இதுவரை மழையினால் உயிரிழந்த 3 பேருக்கு தலா ரூ.4 லட்சம் வீதம் ரூ.12 லட்சம் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இறந்த 106 கால்நடைகளுக்கு ரூ.13 லட்சத்து 23 ஆயிரமும், சேதம் அடைந்த 607 வீடுகளுக்கு ரூ.25 லட்சத்து 70 ஆயிரமும் நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளன. இதுவரை திருவாரூர் மாவட்டத்தில் 13 நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் 2 ஆயிரத்து 351 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.திருவாரூர் மாவட்டம் முழுவதும் 30 சிறப்பு மருத்துவக்குழுக்கள் அமைக்கப்பட்டு பஸ் நிலையம், ரெயில் நிலையம் போன்ற இடங்களில் மருத்துவ உதவிகளை வழங்கி வருகின்றனர். அனைத்து பகுதிகளிலும் நிலவேம்பு குடிநீர் வழங்கப்படுகிறது. சம்பா நெற்பயிர்கள் கால்நடைத்துறை மூலம் வட்டார அளவில் 38 குழுக்கள் நியமிக்கப்பட்டு உயிிரிழந்ித கால்நடைகள் உரிய பிரேத பரிசோதனை செய்து சான்று உடனுக்குடன் வழங்கப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் வெள்ள காலங்களில் ஏற்படும் உடைப்பு மற்றும் பொழிவுகளை உடனடியாக சீரமைத்திட 2 லட்சம் மணல் மூட்டைகள் மற்றும் மணல், சாக்கு, சவுக்கு மரம் போன்ற பொருட்கள் 30 இடங்களில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை 13 உடைப்புகள், 151 கரை பொழிவுகள் ஏற்பட்ட இடங்களில் மணல் மூட்டைகள் அடுக்கி சீரமைக்கப்பட்டுள்ளது. கனமழையினால் திருவாரூர் மாவட்டத்தில் 62 ஆயிரத்து 413 எக்டேர் சம்பா நெற்பயிர்கள் நீரில் முழ்கியுள்ளன. இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது மாவட்ட வருவாய் அதிகாரி மோகன்ராஜ், நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி, உதவி கலெக்டர் முத்துமீனாட்சி மற்றும் பலர் உடனிருந்தனர்.

## ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் அனைத்து விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்



தொடர் மழையால் பாதிக்கப்பட்டுள்ள நெற்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று அனைத்து விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது. பேட்டி மன்னார்குடியில் அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்புக்குழுதலைவர் பாண்டியன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

தொடர்ந்து பெய்து வருகின்ற வடகிழக்கு பருவமழையின் காரணமாக சம்பா பயிர்கள் நீரால் சூழப்பட்டும் பல இடங்களில் தண்ணீரில் மூழ்கி அழுகியும் வீணாகிவிட்டது. இவ்வாறு சுமார் 2 லட்சம் ஏக்கரில் பயிர்கள் அறுவடை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இதனை கண்டு விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இந்தநிலையில் தமிழக அரசு பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.13 ஆயிரம் அறிவித்திருப்பது விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம்

எனவே பாதிப்புகளை உணர்ந்து தமிழக அரசு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் அறிவித்திட வேண்டும். நிலுவையில் உள்ள அனைத்து விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். பயிர் காப்பீடு பிரிமியத்தை அரசே ஏற்று செலுத்திட வேண்டும். இதுவரை பிரிமியத்தை செலுத்திய விவசாயிகளிடம் வசூலிக்கப்பட்ட பிரிமியத்தொகையை திருப்பி தர வேண்டும். தற்போது மாவட்ட நிர்வாகம் அழுகிய நிலையில் உள்ள பயிர்களை மட்டுமே பாதித்துள்ளதாக கணக்கிட்டு பாதிப்படைந்த பரப்பளவை குறைத்து மதிப்பீட்டு வருகின்றன. இது முற்றிலும் தவறானது. தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ள மானாவாரி பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு பயிர்களின் தன்மைக்கு ஏற்ப ரூ.50 ஆயிரத்திற்கும் குறைவில்லாமல் வழங்கிட வேண்டும். கரும்பு உள்ளிட்ட நீண்ட கால பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.75 ஆயிரம் வழங்கிட வேண்டும். கால்நடை இழப்புகளுக்கு ரூ.50 ஆயிரம், ஆடுகளுக்கு ரூ.10 ஆயிரம் என அறிவிக்க வேண்டும். இதேபோல் கடலூர் மாவட்ட விவசாயிகள் சாகுபடி செய்து தங்களது பணிகளை தொடங்கும் வரை விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் மாதாந்திர உதவித்தொகை வழங்கி பாதுகாத்திட வேண்டும். சென்னையில் பேரழிவை சந்தித்துள்ள மக்களுக்கு அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு குழு சார்பில் 10 டன் அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவு பொருட்கள் வழங்கி உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார். பேட்டியின் போது அனைத்து விவசாயிகள் சங்க

கூட்டமைப்பு நிர்வாகிகள் ராஜேந்திரன், ஞானசேகரன், செந்தில்குமார், தெய்வமணி மற்றும் பலர் உடன் இருந்தனர்.

## காங்கயம் பகுதியில் தொடர்மழையால் தேங்காய் எண்ணெய் தொழில் பாதிப்பு தொழிலாளர்கள் திண்டாட்டம்



காங்கயம் பகுதியில் தொடர்மழை காரணமாக தேங்காய் எண்ணெய் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இதை நம்பியுள்ள தொழிலாளர்கள் பலர் வேலை இழந்துள்ளனர். தேங்காய் எண்ணெய் தொழில்

திருப்பூர் மாவட்டம் காங்கயம் பகுதியில் 1,000–க்கும் மேற்பட்ட தேங்காய் உடைத்து உலர்த்தும் களங்கள் உள்ளன. அதுபோல் 100–க்கும் மேற்பட்ட எண்ணெய் ஆலைகளும் உள்ளன. தினமும் சுமார் ரூ.5 கோடி வரை வர்த்தகம் நடைபெறுகிறது. இந்த தொழிலில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு சுமார் 30 ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர். ஆனால் கடந்த 3 ஆண்டுகளாக இந்த தொழில் பெரும் சரிவை சந்தித்து வருகிறது. கடுமையான வறட்சி காரணமாக தேங்காய் வரத்து குறைந்து போனது. இதனால் அதிக விலை கொடுத்து தேங்காய் வாங்கி உடைத்து, பருப்பு நீக்கி அதை விற்பனை

செய்யும்போது சரியான விலை கிடைக்காததால் தொழிலை தொடர்ந்து நடத்த முடியாமல் பாதிக்கும் மேற்பட்ட ஆலைகள் மூடப்பட்டன.

கேரளா மற்றும் வட மாநிலங்களுக்கு ஏற்றுமதியாகும் எண்ணெயும், கொப்பரை அளவும் குறைந்து. தினமும் சுமார் ரூ.2 கோடிக்கு மட்டுமே வர்த்தகம் நடைபெற்று வருகிறது. அதுபோல் பெரும்பாலான களங்களில் தேங்காய் உடைப்பு, மற்றும் உலர்த்தும் பணிகள் நின்று போனது. குறிப்பிட்ட சிலர் மட்டுமே வேலை ஆட்களை தக்க வைக்க தொழிலை தொடர்ந்து நடத்தி வந்தனர். இதனால் பெரும்பாலான களங்கள் வெறிச்சோடி காணப்பட்டன. படிப்படியாக தொழிலாளர்களும் வேலை இழந்தனர். தொழில் பின்னடைவு

இதனால் கடந்த 3 ஆண்டுகளாக காங்கயத்தில் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வியாபார கடைகள், சந்தைகள் போன்றவற்றில் வியாபாரம் பாதிக்கப்பட்டது. குறிப்பாக காங்கயம் பகுதியில் பொருளாதாரமே பாதிக்கப்பட்டது. கடந்த 25 ஆண்டுகளில் இல்லாத அளவில் இந்த தொழில் பெரும் பின்னடைவை சந்தித்தது.

ஆனால் கடந்த ஆண்டு தமிழகத்தில் பரவலாக பெய்த மழையின் காரணமாக தேங்காய் வரத்து அதிகரித்தது. இதனால் கடந்த சில மாதங்களாக மீண்டும் ஓரளவு தொழில் நடந்து வந்தது. சுமார் 30 சதவீத களங்களில் மீண்டும் தேங்காய் உடைப்பு பணிகள் நடைபெற்று வந்தது. ஆனாலும் பெரிய அளவில் உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமல், தேங்காய் எண்ணெயும், பருப்பு விலையில் தொடர்ந்து நிலையில்லாமல் ஏற்ற இறக்கத்துடனே இருந்து வந்தது. தொடர் மழையால் பாதிப்பு

இந்த நிலையில் கடந்த ஒருமாத காலமாக தமிழகத்தில் பெய்துவரும் மழையினால் இந்த தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தீபாவளிக்கு சொந்த ஊருக்கு சென்ற வெளியூர் தொழிலாளர்கள் பாதிக்கும் மேற்பட்டோர் தொடர் மழை காரணமாக இன்னும் திரும்பவில்லை. அதே சமயம் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்களும் தற்போதைய தொடர்மழையால் சரியாக வேலை இல்லாமல் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது. குடும்பத்துடன் தங்கி வேலை செய்யும் வடமாநில மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்கள், குடும்ப

செலவுகளை சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதே சமயம் வர்த்தகமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

**விவசாயிகள் ஆலோசனை கூட்டம்**

சோமனூர், :கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நேற்று சோமனூரில் நடந்தது. இதில் தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். உறுப்பினர்கள் பலர் பங்கேற்றனர். கூட்டத்தில், உழவர் பெருந்தலைவர் நாராயணசாமியின் 31வது நினைவு தினம் வரும் 21ம் தேதியன்று பேரணியாக சென்று வையம்பாளையத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவது, கணியூர் டோல்கேட்டில் உள்ளூர் வாகனங்கள் அனைத்திற்கும் இலவசமாக அனுமதிக்க வேண்டும். 2 வாரத்திற்குள் அனுமதிக்காவிட்டால் ேபாராட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. **பனிப் பொழிவு இல்லாததால் 'குயின் ஆப் சைனா' மலர்கள் பூப்பதில் தாமதம்** தாமதமாகும் பனிகாலத்தால் ஆண்டு தோறும் டிசம்பர் மாதம் பூத்துக் குலுங்கும் சீன அரசி எனப்படும் (குயின் ஆப் சைனா) பவுலோனியா பார்சினி மலர்கள் பூக்காமல் மொட்டாகவே உள்ளது என்று பூங்கா ஊழியர்கள் தெரிவித்தனர். பவுலோனியா பார்சினி என்ற மலர் வகையை சீன அரசி என்று அழைக்கப்படுகிறது. இந்த வகை மலர்கள் மரங்களில் பூக்கக்கூடியது. இவை சீன நாட்டில் அதிகளவு காணப்படும். இந்த மரம் பல்வேறு சாதனங்கள் செய்வதற்காக வளர்க்கப்படுகிறது. குளிர் காலத்தில் (டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை) இந்த மரத்தில் மலர்கள் பூத்துக் குலுங்கும். இந்த மலர் வெள்ளை நிறம் கலந்த இளஞ்சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும்.

இதனை, சீன மக்கள் குயின் ஆப் சைனா என்று அழைக்கின்றனர். இவ்வகை

மரங்கள் இந்தியாவில் அரிதாகவே காணப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளுக்கு முன் சீனாவில் இருந்து இம்மரம் ஊட்டிக்கு கொண்டு வரப்பட்டு தாவரவியல் பூங்காவின் அலுவலகம் அருகே நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த மரத்தில் ஆண்டு தோறும் டிசம்பர் மாதத்தில் மலர்கள் பூத்துக் குலுங்க துவங்கும். ஆனால், இந்த முறை கடந்த இரண்டு மாதங்களாக மழை பெய்து வருவதால், பனியின் தாக்கம் முற்றிலும் குறைந்து காணப்படுகிறது. சரியான பனிப் பொழிவு இல்லாததால் இந்த மலர்கள் தற்போது பூக்காமல் மொட்டாக உள்ளது. மழை ஓய்ந்து ஓரிரு நாட்கள் பனி விழுந்தால், இந்த மரத்தில் மலர்கள் பூக்க துவங்கும் என பூங்கா ஊழியர்கள் தெரிவித்தனர்.

## அமராவதி பாசனத்தில் மழையால் கரும்பு பயிர்கள் நாசம்

உடுமலை பகுதியில் பெய்து வரும் தொடர்மழையால் அமராவதி ஆற்றுப்பாசனத்தில் கரும்பு பயிர் சாய்ந்து நாசமடைந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். அமராவதி ஆற்றில் பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கும்,புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கும் கடந்த ஜூலை மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அதனால் விவசாயிகள் கரும்பு பயிரிட்டனர், புதிய ஆயக்கட்டு பாசனத்தில் 80 சதவீதம், பழைய ஆயக்கட்டு பாசனத்தில் 20 சதவீதம் கரும்புகள் பயிடப்பட்டன. பெரும்பாலும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒப்பந்த விவசாயிகளே கரும்பு பயிரிட்டுள்ளனர். தற்போது கரும்பு நன்கு செழித்து வளர்ந்துள்ளது. இன்னும் 2 மாதத்தில் அறுவடைக்கு தயாராகும். இந்நிலையில் தற்போது இப்பகுதியில் தொடர்மழை பெய்து வருகிறது. இதனால் ருத்ராபாளையம்,சாமராயப்பட்டி,பெருமாள்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் 300க்கும் மேற்பட்ட ஏக்கரில் கரும்பு பயிர் சாய்ந்து விட்டன, ஏக்கருக்கு ரூ.60ஆயிரம் வரை செலவு செய்து விவசாயிகள் கரும்பை பயிர் செய்துள்ளனர். நல்ல மகசூல் கிடைக்கும்பட்சத்தில் ஏக்கருக்கு ரூ.50ஆயிரம் வரை லாபம் கிடைக்கும் என மகிழ்ச்சியில் இருந்தனர். இந்நிலையில் மழையில் கரும்பு சாய்ந்ததால் கவலையடைந்துள்ளனர். சாய்ந்த

கரும்பு பயிருக்கு மண் அடை போட்டால் எவ்வித சேதமும் வராது, கரும்பின் பிழிதிறனும் குறையாது என வேளாண் அதிகாரிகள் யோசனை தெரிவித்துள்ளனர்.

**நெல் பயிரிட்ட நிலங்களில் களை எடுக்கும் பணி தீவிரம்**

மயிலம் வட்டார பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்த பருவமழையால் நெற்பயிர் விளைந்த நிலங்களில் விவசாயிகள் களை எடுக்கும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.கடந்த ஒரு மாத காலமாக பருவமழையால் கனமழை நீடித்தது. இந்த சம்பா பருவத்தில் மயிலம் வட்டார பகுதிகான மயிலம், பாதிராப்புலியூர், செண்டூர், நெடி, மோழியனூர், கொல்லியங்குணம், எடப்பாளையம், புலியனூர், ஆசூர், கேணிப்பட்டு, பந்தமங்கலம், விளங்கம்பாடி, சின்னநெற்குணம், நல்லாமூர், கூட்டேரிப்பட்டு உள்ளிட்ட நெல் பயிரிடும் சுமார் 3500 ஹெக்டேர் விவசாய பரப்பில் 90 சதவிகிதத்திற்கு மேல் நடவு பணி முடிக்கப்பட்டுள்ளது.

நடவு பணி முடிந்து 15 நாட்களுக்கு மேல் ஆகிய நிலையில் தற்போது மயிலம் அடுத்த எடப்பாளையம், கொல்லியங்குணம் பகுதி விவசாயிகள் களை எடுக்கும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த பருவமழை ஒரு தரப்பு விவசாயிகளை பாதிப்பை ஏற்படுத்தி இருந்தாலும், மேடான பகுதிகளில் விளை நிலங்கள் உள்ள விவசாயிகள் பயிர் செழித்து வளர்ந்துள்ளது. இதனால் அடுத்த கட்ட பணியில் மும்முரமாக உள்ளனர்.

**அடிமாட்டு விலையால் வாழைகளில் தார்கள் வெட்டப்படாமல் பழுத்து நாசம் செங்கம் விவசாயிகள் வேதனை**

செங்கம், : செங்கம் அருகே மலையடிவார கிராமங்களில் தொடர் மழையாலும் அடிமாட்டு விலையாலும் வாழைத்தார்கள் வெட்ட முடியாமல் மரத்திலேயே பழுத்து நாசமாவதால் விவசாயிகள் வேதனைக்குள்ளாகி உள்ளனர். செங்கம் அடுத்த ஜவ்வாது மலை அடிவாரத்தில் கோவில் கொல்லை, மேல்சிலம்பபடி, விலாமுச்சி, பன்ரேவ், கிளையூர், கல்லாத்தூர், துரிஞ்சி குப்பம், தொட்டி மடுவு

உட்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்த கிராமங்களில் வசிக்கும் மக்கள் பிரதான தொழிலாக விவசாயம் செய்கிறார்கள். தற்போது இங்கு அதிக அளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தொடர் மழை மற்றும் சென்னை வெள்ளச் சேதம் போன்றவற்றால் இங்கு குலை தள்ளிய வாழைகளில் தார் வெட்டி விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டனர். மேலும் காய்கள் விளைந்த பிறகும் தார் வெட்டப்படாமல் இருப்பதால் வாழை மரத்திலேயே காய்கள் பழுத்து நாசமாகின்றன. மேலும் வாழை தாருக்கு போதிய விலை இல்லாததால் அதன் வெட்டு கூலி, விற்பனைக்கு எடுத்து செல்லும் வாகன செலவு ஆகியவற்றை கூட ஈடுசெய்ய முடிவில்லை. அதனால் விவசாயிகள் வாழைத்தார் □10, □20க்கு என அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் மழையின்றி பயிர் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டு அதன்பிறகு வாழை பயிரிட்டு நல்ல முறையில் வளர்த்து தார் வெட்டும் நிலையில் உரிய விலை இல்லாததால் விவசாயிகள் கடும் நஷ்டத்துக்கு ஆளாகி உள்ளனர். எனவே, அவர்களுக்கு அரசு நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மலை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**உடுமலை, மடத்துக்குளத்தில் 20 ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம்**

உடுமலை,: உடுமலை,மடத்துக்குளம்,குடிமங்கலம் பகுதியில் 20 ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளது. இவை தற்போது பெய்துவரும் மழை காரணமாக செழிப்பாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். உடுமலை, குடிமங்கலம் ஒன்றிய பகுதிகளில் பிஏபி 4ம் மண்டல பாசன பகுதிக்கு திருமூர்த்தி அணையில் இருந்து கடந்த ஜூலை மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. இப்பகுதியில் 17500 ஏக்கரில் விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிட்டனர். அதேபோல் அமராவதி பாசனத்தில் மடத்துக்குளம் பகுதியில் 2500 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டது.

கடந்த செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இப்பயிர் சாகுபடி துவங்கியது.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 300 விவசாயிகளுக்கு தலா ரூ.4ஆயிரம் மானியம் வழங்கப்பட்டது. ஏக்கருக்கு ரூ.15ஆயிரம் முதல் ரூ.20ஆயிரம் வரை செலவு செய்து விவசாயிகள் இப்பயிரை சாகுபடி செய்துள்ளனர். வரும் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இந்த மக்காச்சோளம் அறுவடைக்கு தயாராகும். ஒரு ஏக்கருக்கு மூன்றரை டன் வரை மகசூல் கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். மேலும் தற்போது பெய்து வரும் சாரல் மழை காரணமாக இந்த மக்காச்ே◌சாளம் செழித்து வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**நடுங்கவைக்கும் குளிரால் கால்நடைகளுக்கு தொற்றுநோய் பரவல்**

திண்டுக்கல், : நடுங்கவைக்கும் குளிரினால் கால்நடைகளுக்கு தொற்றுநோய் பரவி வருவதால் கிராமங்களில் அதிகாரிகள் ஆய்வு செய்து அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.வடகிழக்குப்பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் பருவநிலையில் மாறுபாடு ஏற்பட்டுள்ளது. இரவில் மட்டுமல்லாது பகலிலும் குளிர் நிலவிவருகிறது. இதனால் கால்நடைகள் நோய் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.இதையடுத்து கிராமங்களில் உள்ள ஆடுகளுக்கு நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து மாவட்ட கால்நடைத்துறை இணை இயக்குநர் ராஜேந்திரன் தலைமையில் நோய் புலனாய்வுக்குழுவினர் ஆய்வு நடத்தினர். இதற்கான சிறப்பு முகாம் நத்தம் ஊராளிபட்டியில் நடைபெற்றது. ஒன்றியக் குழு தலைவர் யோகமலர் உத்தமன், ஒன்றியக்குழு உறுப்பினர் பிறவிக்கவுண்டர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நோய்புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் மாரிமுத்து, கோட்ட உதவி இயக்குநர் அப்துல்காதர், சிறுகுடி கால்நடை டாக்டர் வெங்கடேஸ்வரன் ஆகியோர் ஆய்வுப்பணிகளை மேற்கொண்டனர். தொடர்ந்து ஊராளிப்பட்டி, அட்டையம்பட்டி, சீரங்கபட்டி, காத்தப்பட்டி, எரக்காபட்டி போன்ற கிராமங்களைச் சேர்ந்த 2 ஆடுகளுக்கு குடற்புழுநீக்க மருந்துகள் கொடுக்கப்பட்டன.தொடர்ந்து ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கன்னிமானூத்து பகுதிகளில் ஆய்வுப்பணி துவங்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை

கால்நடை உதவிமருத்துவர் சங்க செயலாளர் முத்துச்சாமி பாண்டியன் செய்திருந்தார்.

**நர்சரிகளில் களைகட்டும் மரக்கன்று விற்பனை**

திண்டுக்கல், : மரக்கன்றுகள் வளர்ப்பதற்கான பருவநிலை நிலவுவதால் மாவட்டத்தில் உள்ள நர்சரிகளில் செடிநாற்றுகள், மரக்கன்றுகள் விற்பனை களைகட்டியுள்ளது. மரம் வளர்ப்பில் சமீபகாலமாக அனைத்து தரப்பினருக்கும் ஆர்வம் அதிகரித்துள்ளது. வீட்டில் செடி மட்டுமே வளர்ந்தவர்கள் தற்போது நிழல், காற்று தரும் மரங்களுக்கு முக்கியத்துவம் தரத்துவங்கிவிட்டனர். காரணம் வெயில்காலங்களில் ஏற்படும் பரிதவிப்புதான். வீடுகளில்மட்டுமல்லாது சாலையோரம் போன்ற பொதுஇடங்களிலும் பல்வேறு அமைப்புகள் மரக்கன்றுகளை நடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. இருப்பினும் கோடைகாலங்களில் இவற்றை நட்டால் நீர்ஊற்றுவதில் பெரும் சிரமம் இருக்கும். எனவே கோடைபருவத்தில் கன்றுநடவு குறைவாக இருக்கும். தற்போது மழை பொழிந்து வளர்வதற்கு ஏற்றநிலை நிலவுவதால் பலரும் இதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்காக நர்சரிகளில் பூச்செடிகள், மரக்கன்றுகளின் விற்பனை களைகட்டி வருகிறது.இது குறித்து திண்டுக்கல்லை சேர்ந்த பாலமுருகன் கூறுகையில், சுற்றுச்சூழல் வெகுவாய் மாசுபட்டு வரும்நிலையில் மரம்வளர்ப்பு அத்தியாவசியமாகும். பூவரசு போன்ற மரங்கள் அதிகளவில் ஆக்சிஜனையும், புங்கன் அதிக நிழல், குளிர்ச்சியையும் தரும். எனவே இவற்றை வாங்கி வீடுகளில் நட்டு வருகிறோம். மேலும் மரம்வளர்ப்பில் ஆர்வம் கொண்ட அமைப்புகளும் இப்பருவத்தை உரியமுறையில் பயன்படுத்தி வருகின்றன, என்றார்.

**சொட்டுநீர் பாசன பயிற்சி முகாம்**

குளித்தலை, : குளித்தலை வட்டாரம் நல்லூரில் தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன பயிற்சி முகாம் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சியை ஊராட்சி தலைவர் வெள்ளைச்சாமி தலைமை

வகித்து துவக்கி வைத்தார். சொட்டுநீர் பாசன திட்டம், சொட்டுநீர் பாசனம் அமைக்க தேவைப்படும் ஆவணங்கள் மற்றும் மானியம் பெறுவதற்கான தகுதி வழிமுறை, சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கான முக்கியத்துவம், தோட்டக்கலை பயிர்களில் சொட்டுநீர் பாசன முறை சிறப்பாக செயல்படுவது குறித்து குளித்தலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) தமிழ்செல்வி எடுத்துரைத்தார். மேலும் நாகர்ஜுனா, பிரிமியர் மற்றும் பினோளக்ஸ் சொட்டுநீர் பாசன நிறுவன பிரதிநிதிகள், விற்பனையாளர்கள் பங்கேற்று சொட்டுநீர் பாசனம் அமைக்கும் முறை, கருவிகளை கையாளும் முறை, பராமரிக்கும் முறை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமில் நல்லூர் மற்றும் இனுங்கூர் பகுதி விவசாயிகள் பங்கேற்றனர். கரோலின் சகாயமேரி நன்றி கூறினார்.

**மடையில் ஏற்பட்ட பழுதை சரி செய்யாததால் கண்மாயிலிருந்து நீர் கசிவு 200 ஏக்கர் பயிர்கள் சேதம்**

விருதுநகர், : விருதுநகர் அருகே மெட்டுக்குண்டு கிராம பெரிய கண்மாய் மடையில் ஏற்பட்டுள்ள தண்ணீர் கசிவு காரணமாக நெல், பயறு பயிர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.விருதுநகர் அருகே மெட்டுக்குண்டு கிராமத்தில் உள்ள பெரிய கண்மாய் மடையை உரிய முறையில் பராமரிப்பு செய்யவில்லை. இதனால், மடையில் இருந்து கண்மாயில் தண்ணீர் கசிவு ஏற்பட்டுள்ளது. கடந்த ஒரு மாதமாக கசிந்து வரும் நீரால் அருகில் உள்ள மோகன் காந்தி என்பவருக்குச் சொந்தமான வாழை தோட்டத்திற்குள் தண்ணீர் புகுந்து 2 ஏக்கரில் வாழை முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

மேலும் அருகில் உள்ள 8 ஏக்கர் வாழை, 200 ஏக்கர் பாசிப்பயறு, உளுந்து வகைகள் அழுகி விட்டன. 200 ஏக்கர் குதிரை வாலி அழுகும் நிலையில் உள்ளன. சேதமடைந்த பயிர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமென விவசாயிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக மோ கன்காந்தி கூறுகையில், “மெட்டுக்குண்டு பெரிய கண்மாய் மடை சேதமடைந்துள்ளது. இதனால் மழைக்

காலங்களில் தண்ணீர் வேகமாக கசிந்து வெளியேறி வருகிறது.

கண்மாயில் இருக்கும் தண்ணீர் முழுமையாக 40 நாட்களில் வெளியேறி விடும் நிலை உள்ளது. மடை பழுதை சரி செய்யாமல் இருப்பதால் தண்ணீர் முழுமையாக வெளியேறி வீணாகிறது.தண்ணீர் வடிய வழியில்லாததால் 200 ஏக்கரில் உளுந்து, பாசிப்பயறு செடிகள் அழுகிவிட்டன. மழை மேலும் 10 நாட்கள் தொடர்ந்தால் 200 ஏக்கரில் பயிரிட்டுள்ள குதிரைவாலி பயிர்களும் அழுகிவிடும். எனவே, மடையை சரி செய்வதோடு, மழைநீர் தேங்காமல் இருக்க போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும். 200 குதிரைவாலி பயிர்களை காப்பற்றவும் வழி செய்ய வேண்டும்" என்றார்.

**பாசனத்துக்கு அணைகளில் நீர் திறப்பு வேகமாக குறையுது கோவிலாறு அணை**

விருதுநகர், : பாசனத்துக்குத் தொடர்ந்து அணைகளில் இருந்து நீர் திறக்கப்படும் நிலையில் கோவிலாறு அணை வேகமாக குறைந்து வருகிறது.விருதுநகர் மாவட்டத்தில் சராசரி மழையளவான 811.70 மி.மீ என்ற நிலையில் ம் தேதி வரை மாவட்டத்தில் 850 மி.மீ மழை பதிவானது. இருப்பினும் மாவட்டத்தில் உள்ள கண்மாய்களின் நீர்வரத்துக் கால்வாய்கள் அடைக்கப்பட்டு இருப்பதால் 1075 கண்மாய்களில் 189 கண்மாய்கள் மட்டும் நிறைந்துள்ளன. மற்ற கண்மாய்களில் பாதி அளவுக்கும் குறைவான தண்ணீர் உள்ளது. அணைகளுக்கு நீர்வரத்து உள்ள நிலையில் மாவட்டத்தில் உள்ள அணைகளின் நேற்றைய நீர்மட்ட நிலவரம்: பெரியாறு அணையின் 43.4 அடி கொள்ளளவில் 31.31 அடி நீர் இருப்புள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 153 கன அடிநீர் முழுமையாக வெளியேற்றப்படுகிறது. கோவிலாறு அணையின் 40 அடி கொள்ளளவில் 12 அடி நீர் இருப்பு உள்ளது. அணைக்கு 126 கனஅடி நீர்வரத்தும், 150 கன அடியும் வெளியேற்றப்படுகிறது. வெம்பக்கோட்டை அணையின் 23 அடி கொள்ளளவில் 20.15 அடிநீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 950 கன அடிநீர் முழுமையாக

வெளியேற்றப்படுகிறது. கோல்வார்பட்டி அணை 18 அடி கொள்ளளவில் 15.24 அடிநீர் இருப்பு உள்ளது. அணைக்கு வினாடிக்கு 100 கன அடிநீரில் 70 கனஅடி வெளியேற்றப்படுகிறது. ஆனைக்குட்டம் அணை 24 அடி கொள்ளளவில் 15 கனஅடி நீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 100 கனஅடிநீர் வரத்துள்ளது.

குல்லூர்சந்தை அணை 8.25 அடி கொள்ளளவில் 8 அடி நீர் இருப்புள்ளது. அணை க்கு வினாடிக்கு வரும் 10 கனஅடி முழுமையாக வெளியேற்றப்படுகிறது. இருக்கன்குடி அணையின் 22.25 கொள்ளளவில் 19.3 அடி நீர் இருப்புள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 450 கனஅடி முழுமையாக வெளியேற்றப்படுகிறது. சாஸ்தா கோவில் அணை 31 அடி கொள்ளளவில் 27.28 அடி நீர் இருப்புள்ளது. அணைக்கு வினாடிக்கு 50 கன அடிநீர் வரத்துள்ளது. கோவிலாறு அணைக்கு நீர்வரத்துக் குறைந்துள்ள நிலையில் வினாடிக்கு 150 கனஅடி நீர் பாசனத்துக்குத் திறக்கப்படுவதால் 40 அடி கொள்ளளவு உடைய அணையில், தற்போது 12 அடி நீர் மட்டுமே உள்ளது.

**பயிர் மேலாண்மை பயிற்சி முகாம்**

திருச்சுழி, : கோவிலாங்குளத்தில் உள்ள வேளாண் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் எம்.ரெட்டியபட்டி வட்டார விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் 2015-2016ம் ஆண்டு நிலக்கடலை, எள் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி முகாம் நடந்தது.வேளாண் துணை இயக்குநர் பாலமுருகன் தலைமை வகித்தார். எம்.ரெட்டியபட்டி வேளாண் உதவி இயக்குநர் நாச்சியாரம்மாள் முன்னிலை வகித்தார். உழவியல் துறை பேராசிரியர் செந்திவேல் நிலக்கடை, எள் சாகுபடியில் நில சீர்திருத்தம், கோடை உழவு, ஊட்டமேற்றிய தொழுவுரம் இடுதல், விதை நேர்த்தி பற்றி விளக்கினார்.

மேலும், சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றியும், ஜிப்சமிடுதல், நிலபோர்வை அமைத்தல் பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

மண்ணியல் துறை பேராசிரியர் முனைவர் சரவணப்பாண்டி, மண் பரிசோதனை மற்றும் உரமேம்பாடு நுண்ணூட்டச் சத்துகள் இடுவதால் ஏற்படும் பயன்பாடுகள் பற்றியும், எண்ணெய் வித்து பயிர்களுக்கு மாங்கனீஸ் சத்துக்கள் இடுவதால் எண்ணெய் சத்து அதிகமாகவும், கடலைகள் திரட்சியாகவும், பருப்புகள் அதிக எடை உள்ளதாகவும் விவசாயிகளுக்கு கருத்துகளை தெரிவித்தார். முனைவர் ஆனந்தி, மாரீஸ்வரி கடலை/எள் பயிர்களில் ஏற்படும் நோய்கள் பற்றியும், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் தகுந்த நேரத்தில் பயிர் பாதுகாப்பு செய்து கூடுதல் மகசூல் பெற தொழில்நுட்ப ஆலோசனை வழங்கினர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துக்கருப்பன் நன்றி கூறினார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வலுவிழந்தது காற்றழுத்தத் தாழ்வு நிலை: தமிழகத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு இல்லை**

குமரிக் கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவிழந்ததால், தமிழகத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பில்லை என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து, சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்குமரிக் :பாலசந்திரன் வியாழக்கிழமை கூறியதாவது. கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த காற்றழுத்தத் தாழ்வு நிலையானது, வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் வலுவிழந்து விட்டது. பலத்த மழைக்கு வாய்ப்பு இல்லை அடுத்த :24 மணி நேரத்தில், கிழக்கில் வீசும் காற்றில் ஏற்படும் வேக மாறுபாட்டின் காரணமாக, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதுதற்போதுள்ள நிலவரப்படி ., புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகும் வாய்ப்பில்லை. இதன் காரணமாக, அடுத்து வரும் 2 நாள்களுக்கு தமிழகத்தில் பலத்த மழை பெய்யும் வாய்ப்பில்லை டிசம்பர் .31-ஆம் தேதி வரை, வட கிழக்குப் பருவ மழை காலம் உள்ளதால், ஒரு சில இடங்களில் மழை

இருக்கும்தற்போதைய சூழலுக்கு ., மழை படிப்படியாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மழை குறையும்சென்னை மாநகரைப் பொருத்தவரை :, பொதுவாக வானம் மேக மூட்டத்துடன் காணப்படும்மாநகரில் ஒரு சில . பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யும் வாய்ப்புள்ளது. மீனவர்களுக்குதமிழகம் :..., புதுச்சேரி கடலோரப் பகுதியில், வட கிழக்கு திசையிலிருந்து மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்தில் பலத்த காற்று . ஆகையால் .வீசக்கூடும், மீனவர்கள் கடலுக்குள் மிகுந்த எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும் என்றார் எஸ்.பாலசந்திரன். இரு மடங்கு மழைவடகிழக்குப் : .பருவ மழை காலத்தில் தமிழகத்தில் இதுவரை இரு மடங்கு மழை பெய்துள்ளது .சராசரியாக அக்1 முதல் டிச.10-ஆம் தேதி வரை 397 மிமீட்டர் மழை பெய்ய . ஆனால் .வேண்டும், நிகழாண்டில் வியாழக்கிழமை காலை 8.30 மணி வரை, 649.5 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. சென்னை மாவட்டத்தைப் பொருத்தவரை, அக்.1 முதல் வியாழக்கிழமை காலை 8.30 மணி வரை 714.3 மிஆனால் .மீட்டர் மழை பெய்ய வேண்டும்., 1613.9 மிமீட்டர் அளவுக்கு மழை . .பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு விவரம் ) :(மீட்டரில்.மி

தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் 40 மி.மீ மழை பெய்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக, கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பு, பண்ருட்டி, தருமபுரி மாவட்டம் அரூர், உளுந்தூர்பேட்டை, விருத்தாசலத்தில் தலா 30 மி.மீட்டர் மழை பதிவானது. செங்கல்பட்டு, மதுராந்தகம், உத்திரமேரூர், சிதம்பரம், திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம், திருக்கோவிலூர், குடவாசல், நெய்வேலி ஆகிய இடங்களில் தலா 20 மிமீ மழை பதிவானது என்றார் . .பாலசந்திரன்.எஸ்

**பெரம்பலூர் மாவட்டத்தில் பலத்த மழை :20 ஆயிரம் ஹெக்டேர் பருத்திப் பயிர்கள் சேதம்**



தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால், பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பருத்தி பயிர்கள் முற்றிலும் சேதமடைந்தன.

பெரம்பலூர் மாவட்டத்தின் வறட்சிப் பகுதியான வேப்பந்தட்டை, வேப்பூர் ஆகிய வட்டங்களில் மானாவாரிப் பயிர்களையே விவசாயிகள் பெரிதும் நம்பி உள்ளனர்மானாவாரி பயிர்களான பருத்தி ., மக்காச்சோளம், மரவள்ளிக் கிழங்கு ஆகியன இந்தப் பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரமாக உள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் நிகழாண்டு 25 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளதுபருவமழை காலத்தில் மழை . திருப்தி கரமாகப் பெய்திருந்ததால் பருத்தி, மக்காச்சோளம், சின்ன வெங்காயம், மரவள்ளிக் கிழங்கு உள்ளிட்ட பயிர்களை ஆடி மாதத்தில் விவசாயிகள் பயிரிட்டு இருந்தனர்தற்போது ., பருத்தி, மக்காச்சோளம் ஆகியவை அறுவடைக்கு தயாராக இருந்தன. ஆனால், தற்போது பெய்து வரும் பலத்த மழையால் அவை முற்றிலும் சேதமடைந்துவிட்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பருத்தி வயல்களில் தொடர்ந்து தண்ணீர் தேங்கியுள்ளதால், வேர் அழுகல் நோய் ஏற்பட்டுள்ளதுமேலும் ., தொடர்ந்து ஈரப்பதம் நீடித்ததால், புதிதாகக் காய்த்திருந்த பருத்திக் காய்கள் விளையாமல் அழுகிக் கொட்டிவிட்டன . கொட்டாமல் இருக்கும் பருத்திக் காய்களில் இருந்து வெளியாகும் பஞ்சு, கருத்துப்போய்விட்டதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும், நீண்ட நாள்களாக பருத்தி எடுக்காமல் உள்ளதால், வெடித்த பஞ்சுகளில் இருந்து செடிகள் முளைத்துள்ளனஇதனால் ., சாகுபடி செய்யப்பட்டிருந்த 90% பருத்திச் செடிகள் சேதமடைந்துள்ளனபருத்தியைப் . பொருத்தவரை சாதாரணமாக ஏக்கருக்கு15 குவிண்டால் பருத்திப்பஞ்சு கிடைக்கும் .ஒரு குவிண்டால் பருத்தி விலை ரூ .3 ஆயிரம். இதனால், விவசாயிகளுக்கு பருத்திப் பயிர்கள் முற்றிலும் சேதமடைந்து, ஏக்கருக்கு ரூ .35ஆயிரம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்களது ஆண்டு வருவாயை இழந்து தவிப்பதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர். கடந்த ஆண்டு போதிய மழை இல்லாததால், பயிரிடப்பட்டிருந்த பருத்தி, மக்காச்சோளப் பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. இந்நிலையில், தற்போது தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ .25 ஆயிரம் இழப்பீடு வழங்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

### நெல் விவசாயிகளுக்கு பண்ணைப் பள்ளி

அட்மா திட்ட நிதியிலிருந்து நெல் விவசாயிகளுக்கான பண்ணைப் பள்ளி நிலக்கோட்டை வட்டாரத்தில் விளாம்பட்டி கிராம விவசாயி சிவக்குமார் வயலில் புதன்கிழமை நடைபெற்றது. திண்டுக்கல் வேளாண்மை துணை இயக்குநர் மதி, வேளாண்மை துணை மேலாண்மை முகமை உழவர் பயிற்சி நிலையம் தவமுனி ஆகியோர் தலைமையிலும், விளாம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் ராஜேஸ்வரி முன்னிலையிலும் இப்பண்ணைப் பள்ளி நடைபெற்றது . அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர் நிலக்கோட்டை வேளாண்மை உதவி நிகழ்ச்சியில் வ .முருகன் வரவேற்றார்.இயக்குநர் கா◌ேளாண்மை அலுவலர் பாண்டியராஜன் (உழவர் பயிற்சி நிலையம்), இயந்திர நடவு மூலம் திருந்திய நெல் சாகுபடி பற்றிய தொழில் நுட்ப உரையாற்றினார்பின்னர் . விவசாயிகளுக்கு பாய்நாற்றாங்கால் அமைத்து செயல்விளக்கம் செய்து .காட்டப்பட்டது

இதில் வேளாண்மை அலுவலர் விஜயன், துணை வேளாண்மை அலுவலர் தண்டபாணி, உதவி வேளாண்மை அலுவலர் பால்ராஜ் ஆகியோர் பேசினர் . சிங்கத்துரை மற்றும் திட்ட உதவி .ஏற்பாடுகளை அட்மா திட்ட மேலாளர் ஐ .ஜெயசுப்பிரமணி ஆகியோர் செய்திருந்தனர்.மேலாளர் ச

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை .டிச)11) நடைபெறவிருந்த மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மறு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கொவீரராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் . :குறிப்பு
திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற இருந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், மழை மற்றும் வெள்ள சேதத்தால் ஏற்பட்ட இழப்புகளைக் கணக்கெடுக்கும் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒத்திவைக்கப்படுகிறதுஇவ்வாறு .மறு கூட்டத் தேதி பின்னர் அறிவிக்கப்படும் . அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**நெல் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை பயிற்சி**

ராமநாதபுரம் மாவட்டம் எஸ்கொடிக்குளம் கிராமத்தில் நெல் பயிர் . மேலாண்மை குறித்து பண்ணைப்பள்ளி பயிற்சி முகாம் வியாழக்கிழமை .நடைபெற்றது
வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் நடைபெற்ற இப்பயிற்சிக்கு வேளாண்மை தொழில் நுட்ப துணை திட்ட இயக்குநர் உதுமான் முகைதீன் தலைமைவகித்தார்நெல் ரகத் . தேர்வு மற்றும் விதை நேர்த்தி குறித்து
அவர் விளக்கமளித்தார்பண்ணைப் பள்ளி தேர்வு பெற்ற விவசாயி . சுந்தரபாண்டியன் முன்னிலைவகித்தார்இதில் ., கலந்துகொண்ட 25 நெல் சாகுபடி விவசாயிகளுக்கு சத்திரக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் சுருளிமலை கோடை உழவின் பயன்கள் குறித்தும், நீர்ப் பாசன முறையை கையாள்வது குறித்தும், பூச்சி நோய் தாக்குதல் பயிர் மேலாண்மை, உயிர் உர விதை நேர்த்தி, பூஞ்சாண விதை நேர்த்தி, உழவியல் தொழில் நுட்பம் மற்றும் உர நிர்வாகம் குறித்தும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இதுகுறித்த பயிற்சியினை மாவட்ட கடலோர உவர் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ராஜமாணிக்கம், துணை வேளாண்மை அலுவலர் முருகன் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா ஆகியோர் அளித்தனர்.
உதவி தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார்.

### சிவகாசி அருகே பருத்தி பயிர்களை வேளாண் அதிகாரிகள் ஆய்வு

சிவகாசி அருகே சேர்வைக்காரன்பட்டியில் பருத்தி பயிர்களை வியாழக்கிழமை வேளாண்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.
சிவகாசி வட்டாரத்தில் மானாவாரியாக பல ஏக்கர் நிலத்தில் பருத்தி பயிடப்பட்டுள்ளது.

இதில், சில பகுதிகளில் பருத்தி பயிர்களை நோய் தாக்கியுள்ளது.
இந்நிலையில் கோவிலாங்குளம் வேளாண் மண்டல ஆராய்ச்சி நிலையத் தலைவர் பால்பாண்டி, பூச்சியியல் பேராசிரியர் முத்தையா ஆகியோர் சேர்வைக்காரன்பட்டி பகுதியில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி பயிர்களை ஆய்வு செய்தனர்.
அப்போது பயிர்களில் மெக்னீஷியம் குறைபாட்டால் இலை சிவப்பாக மாறியிருப்பது தெரியவந்தது. இந்த குறைபாட்டை நீக்க மெக்னீஷியம் சல்பேட் 5 சதவீதம், யூரியா 1 சதவீதம், துத்தநாக சல்பேட் 0.5 சதவீதம் என தண்ணீரில் கரைத்து, அந்த கரைசலை இலை வழியே தெளிக்க வேண்டும்.
இவ்வாறு செய்தால் இலையின் நிறம் பச்சையாக மாறி மகசூல் பாதிக்காது என விவசாயிகளிடம் அதிகாரிகள் தெரிவித்தனர்ஆய்வின்போது சிவகாசி வட்டார . பத்மாவதி.வேளாண்மை உதவி இயக்குநர் கோ, வேளாண்மை அலுவலர் நாராயணன் உடனிருந்தனர். அறுவடைக்குத் தயாரான நெற் பயிர்கள் மழை நீரில் மூழ்கின: விவசாயிகள் சோகம் தொடர் மழையால் உடுமலை அருகே அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த நெற் பயிர்கள் மழை நீரில் மூழ்கினஇதனால் ., விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

அமராவதி அணையை ஒட்டி அமைந்துள்ள கல்லாபுரம், பூச்சிமேடு, பூளவாடி, வேல் நகர் பகுதிகளில் 1,360 ஏக்கர் பழைய ஆயக்கட்டு நிலங்கள் ராஜவாய்க்கால் பாசனத்தின் கீழ் உள்ளனஇப்பகுதிகளில் ஆண்டு தோறும் . நெற் பயிர் மட்டுமே பயிரிடப்படுவது வழக்கம் .120 நாள்களில் அறுவடை செய்யப்படக் கூடிய குறுவை நெல் ரகத்தை கடந்த செப்டம்பர் முதல் வாரத்தில் விவசாயிகள் பயிரிட்டிருந்தனர்டிசம்பர் முதல் வாரத்தில் நெல் அறுவடை . .தொடங்கியது

இந்நிலையில், வடகிழக்குப் பருவ மழை தீவிரம் அடைந்ததுஅமராவதி . .அணைப் பகுதிகளில் திடீரென கடந்த வாரம் தொடர்ந்து கன மழை பெய்தது மழையால் வேல் நகர் பகுதியில் அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் வயல்கள் செவ்வாய்க்கிழமை தண்ணீரில் மூழ்கினஇதனால் ., அறுவடைப் பணிகளை நிறுத்த வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர் சுமார் . 50 ஏக்கரில் நெற் பயிர்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டன.

இதுகுறித்து வேல் நகர் பகுதி விவசாயிகள் வியாழக்கிழமை கூறியது:

அறுவடைப் பணிகள் நடைபெற்ற நிலையில் கன மழை பெய்ததுஇதில் ., வேல் நகர் பகுதியில் மடை உடைந்து திடீரென நெல் வயல்களில் வெள்ள நீர் புகுந்ததுவயல்களில் உள்ள தண்ணீரை வெளியேற்ற முயற்சி செய்தும் . சுமார் .பலனில்லை50 ஏக்கரில் நெற் பயிர்கள் முற்றிலும் பாதித்துள்ளனஇனி ., அறுவடை செய்தாலும் அடிமாட்டு விலைக்குத்தான் கேட்பார்கள்நெல் பயிரிட . .ஏக்கருக்கு சுமார் ரூ15,000 வரை செலவு ஏற்பட்டதுஅறுவடைக்குத் தயாரான . நிலையில், நெற் பயிர்கள் அழிந்தனஎனவே ., தமிழக அரசு இப்பகுதியில் நெல் கொள்முதல் செய்ய வேண்டும் அல்லது உரிய .நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றனர்.

## சந்தன மரம் வளர்க்கும் திட்டம்: விவசாயிகளுக்கு அழைப்பு

சந்தன மரம் வளர்க்கும் திட்டத்தில் சேர ஆர்வமுடைய விவசாயிகள் தங்களது பெயர்களை ஈரோடு மாவட்ட வன அலுவலர் அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை விடுத்த செய்தி: ஈரோடு, வேலூர், சேலம், தருமபுரி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் சந்தன மரங்கள் அதிகம் வளரும் இடங்களுக்கு அருகில் உள்ள பட்டா நிலங்கள் மற்றும் காப்புக் காடுகளில் சந்தன மரம் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பளித்து, வாழ்வாதார பாதுகாப்பை உருவாக்குவதுடன், சந்தன மர வளத்தைப் பெருக்கி அரசுக்கு கணிசமான வருவாயை ஈட்டித் தருவதோடு, இத்திட்டத்தால், வேலை வாய்ப்புக்காக பழங்குடியினர் வேறு மாநிலங்களுக்கு இடம் பெயர்தலைத் தடுக்க முடியும். இத்திட்டத்துக்கு ஆண்டுக்கு தலா ரூ .10 கோடி வீதம் பத்து ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ .100 கோடி செலவாகும் என்றும், அதன்படி நடப்பாண்டில் இத்திட்டத்துக்கு ரூ .10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும்

தமிழக முதல்வர் சட்டப்பேரவையில் அறிவித்தார். எனவே, சந்தன மரங்கள் அதிகம் வளரும் இடங்களுக்கு அருகில் பட்டா நிலங்களுடைய விவசாயிகள், இந்தத் திட்டத்தில் ஈடுபட ஆர்வம் இருப்பின், பெயர், முகவரி, பட்டா நிலமுள்ள கிராமத்தின் பெயர், நடவு செய்ய விரும்பும் சந்தன மரக் கன்றுகளின் எண்ணிக்கை, தங்களது செல்லிடப்பேசி எண் போன்ற விவரங்களை ஈரோடு ரோஜா நகரில் உள்ள மாவட்ட வன அலுவலர் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்து பதிவு செய்து கொள்ளலாம் இதுகுறித்து மேலும் விவரங்களுக்கு .0424-2291722 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## வீட்டுத் தோட்டம் பராமரிப்பது குறித்து பயிற்சி

கூடலூரை அடுத்துள்ள தொரப்பள்ளி அரசு பழங்குடியினர் உண்டு, உறைவிட நடுநிலைப் பள்ளியில் வீட்டுத் தோட்டம் பராமரிப்பது குறித்த பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது. இப்பயிற்சி முகாமுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் கலாவதி தலைமை வகித்தார். ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டத்தில் காய்கறி, பழவகைகளை பயிரிவடுவது, பராமரிப்பது குறித்த பயிற்சியளிக்கப்பட்டது. கோத்தகிரியில் தொடர் மழை:அழுகும் நிலையில் காய்கறிகள் கோத்தகிரியில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக சுற்றுவட்டாரப் பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள காய்கறிகள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. கோத்தகிரியில் தேயிலைக்கு அடுத்த விவசாயமாக விளங்குவது மலைக் காய்கறிகளாகும்இங்கு பீட்ரூட் ., கேரட், முட்டைக்கோஸ், உருளைக் கிழங்கு, பீன்ஸ் உள்ளிட்டவை பயிரிடப்படுகிறது. இதில், தற்போது முட்டைக்கோஸ், கேரட், பீன்ஸ், உருளைக் கிழங்கு ஆகிய காய்கறிகளை விவசாயிகள் பயிரிட்டிருந்தனர்இந்நிலையில் ., கோத்தகிரி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் பலத்த மழையால் காய்கறித் தோட்டங்களில் தண்ணீர் தேங்கி காணப்படுகிறது.

அறுவடைக்குத் தயாராக இருந்த காய்கறிகள் அழுகும் நிலையில் உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்தோட்டக் கலைத் துறை சார்பில் சிறு . விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை .விடுத்துள்ளனர்

**தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் நெல்லுக்கு காப்பீடு**

தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் நெல் பயிருக்கு காப்பீடு செய்யலாம் என, கிருஷ்ணகிரி வேளாண் இணை இயக்குநர் சபாநடேசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி, நோயினால் பயிருக்குச் சேதம் ஏற்படும்போதும், விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்து, வருமானத்தை உறுதி செய்வதற்காக தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களால் பயிர்கள் பாதிக்கப்படும்போது, இக் காப்பீட்டுத் திட்டம் பயனுள்ளதாக அமையும்நிகழாண்டில் தேசிய வேளாண் காப்பீட்டுத் . திட்டத்தின் கீழ், நெல் 2-ஆம் காரீப் பருவ பயிருக்கான காப்பீட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதுஇதன்மூலம் ., மாவட்டத்தில் நெல் பயிரிடும் அனைத்து விவசாயிகளும், இத் திட்டத்தில் பங்கு பெறலாம்இத் திட்டத்தில் பங்குபெற . விரும்பும் பயிர்க் கடன் பெறும் சிறிய, பெரிய விவசாயிகள் காப்பீடுக் கட்டணமாக நெல் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.149-யைச் செலுத்த வேண்டும்கடன் . பெறாத சிறு, மிகச் சிறு விவசாயிகள் காப்பீட்டுக் கட்டணமாக ஏக்கருக்கு ரூ . 134-யைச் செலுத்த வேண்டும். காப்பீட்டுக் கட்டணங்களை தங்களது கிராம எல்லைக்கு உள்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தலாம்பயிர் காப்பீட்டு கட்டணம் . செலுத்தும் போது, தாங்கள் நெல் பயிர் சாகுபடி செய்துள்ளதற்கு ஆதாரமாக கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல் சான்று பெற்று, அதை விண்ணப்பத்துடன் இணைத்து சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் ஒப்படைக்க வேண்டும் நெல் .2-ஆம் காரீப் பருவ பயிருக்கான பயிர் காப்பீட்டுக் கட்டணம் விவசாயிகள் பயிர் விதைத்து ஒரு மாதம் அல்லது வருகிற டிசம்பர் 15-ஆம் தேதி, இதில், எது முன்னதோ அதற்குள் செலுத்த வேண்டும் . காலக்கெடுவுக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட .மாட்டாது

இத் திட்டமானது பரவலான பாதிப்புகளுக்கு பிர்க்கா அடிப்படையில் செயல்படுகிறதுஒவ்வொரு பயிருக்கும் வரையறுக்கப்பட்ட பகுதியில் இத் . இழப்பீட்டுத் தொகை என்பது நெல் பயிருக்கு .திட்டம் செயல்படும்3 ஆண்டு

சராசரி மகசூலை அடிப்படையாகக் கொண்டு நிகழ் பருவத்தில் கிடைக்கும் மகசூலைக் கணக்கிட்டு வழங்கப்படும்.
குறிப்பிட்ட பகுதியில் காப்பீடு செய்யப்பட்ட பயிரின் சராசரி மகசூலைவிட நிகழ் பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ, அந்த விகிதப்படி அப் பயிரைச் சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவருக்கும் இழப்பீடாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுளளது.

## இன்று திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் வெள்ளிக்கிழமை .டிச)11) திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சியளிக்கப்படுகிறது.

இதுகுறித்து பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தருமபுரி மாவட்டத்தில் கடந்த காலங்களில் பருவமழை போதியயளவு பொழியாததால் நெல் சாகுபடி பரப்பளவு குறைந்ததுஇந்த . நிலையில், தற்போது மாவட்டத்தில் அதிகளவு மழை பெய்துள்ளதால் நெல் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்இதனால் ., சாகுபடி பரப்பளவு நிகழாண்டு அதிகரிக்க வாய்ப்புள்ளதுஇதில் ., திருந்திய நெல் சாகுபடியில் பூச்சி தாக்குதலின்றி, ரசாயனம் கலந்த மருந்துகளைப் பயன்படுத்தாமல், மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பம் குறித்த பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்படுகிறது. எனவே, மாவட்ட விவசாயிகள் இப் பயிற்சி முகாமில் பங்கேற்று பயனடையலாம் பயிற்சியில் கலந்து கொள்ள . 04342-245860 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சம்பா பயிர் காப்பீடு:டிச. 15 கடைசி நாள்

அரியலூர் மாவட்டத்தில் சம்பா பயிர்களுக்கு காப்பீடு செய்ய டிச .15-ம் தேதி கடைசி நாள் என மாவட்ட வேளாண் இணை இயக்குநர் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:
அரியலூர் மாவட்டத்தில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரை தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு வரும் 15-ம் தேதியும், கடன் பெறும் விவசாயிகளுக்கு 31-ம் தேதியும் கடைசி நாளாகும்எனவே ., குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நமது மாவட்ட விவசாயிகள் அனைவரும் தங்களது நெற்பயிரை காப்பீடு

செய்துகொள்ள வேண்டும். தேசிய வேளாண் காப்பீட்டுக் கழகம் மூலம் காப்பீடு செய்யப்படும் நெற்பயிர்களுக்கு மழை, புயல், வறட்சி மற்றும் பூச்சிநோய் தாக்குதல்கள் ஏற்பட்டு மகசூல் இழப்பு ஏற்படும் போது, வட்டார அளவில் நடத்தப்படம் பயிர்க் காப்பீட்டுத் திட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மகசூல் கணக்கீடு செய்யப்பட்டு, பிறகு இழப்பீட்டின் அடிப்படையில் நிகழாண்டில் ஓர் ஏக்கருக்கு 100% இழப்பீடாக ரூ .14,904 என வழங்கப்படும். மேலும், கடன் பெறாத சிறு, குறு விவசாயிகள் ஓர் ஏக்கருக்குரிய பயிர்க் காப்பீட்டுத் தொகையான ரூ .14,904-க்கு காப்பீடு செய்ய பிரீமியத் தொகையாக ரூ .134 செலுத்த வேண்டும்கடன் பெறாத இதர பெரிய . .விவசாயிகள் இதே தொகைக்கு காப்பீடு செய்ய ரூ149 செலுத்த வேண்டும் . பயிர்க் கடன் பெறாத விவசாயிகள் சிட்டா, அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று முன்மொழிவு படிவத்துடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ அல்லது சேவைப் பகுதி வணிக வங்கிகளிலோ பிரீமியத் தொகையை செலுத்தலாம். எனவே, இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி விவசாயிகள் அனைவரும் சம்பா நெற்பயிருக்கான பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

### சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு பயிற்சி

குளித்தலை அருகே சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம் மற்றும் பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

தோட்டக்கலைத் துறை சார்பில் நல்லூரில் நடைபெற்ற இம்முகாமிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் வெள்ளைச்சாமி தலைமை வகித்து தொடங்கி வைத்தார்இதில் ., குளித்தலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) தமிழ்செல்வி வரவேற்று சொட்டுநீர் பாசனம், அமைக்க தேவைப்படும் ஆவணங்கள், மானியம் பெறுவதற்கான தகுதி மற்றும் வழிமுறைகள் குறித்தும், தோட்டக்கலை பயிர்களில் இதன் முக்கியத்துவம் குறித்தும் விவசாயிகளிடம் விளக்கிப் பேசினார். மேலும், சொட்டுநீர் பாசன நிறுவன பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று சொட்டுநீர் பாசனம் அமைக்கும் முறைகள், இயக்கும் முறை பற்றி விளக்கிக் கூறினர். பின்னர், விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்முகாமில் நல்லூர் மற்றும் இனுங்கூர் . உதவி வேளாண்மை .கிராமத்துக்குள்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர் .அலுவலர் கரோலின் சகாயமேரி நன்றி கூறினார்

**கண்டியாநத்தம் ஊராட்சியில் கால்நடை மருத்துவ முகாம்**

பொன்னமராவதி அருகே உள்ள கண்டியாநத்தம் ஊராட்சியில் கால்நடை மருத்துவ முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

மழைக்காலத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் விதமாக நடைபெற்ற முகாமை ஊராட்சித் தலைவர் ப.முருகேசன் தொடங்கி வைத்தார் . முகாமில் ஆலவயல் கால்நடை மருத்துவனை மருத்துவர் சேரன் செங்குட்டுவன் தலைமையில் கால்நடை ஆய்வாளர்கள் முத்துக்குமார், பழனிச்சாமி, உதவியாளர்கள் பழனியப்பன், சாந்தி ஆகியோர் கொண்ட மருத்துவக் குழுவினர் 200 மாடுகள், 650 ஆடுகள் மற்றும் 300 கோழிகளுக்கு பல்வேறு சிகிச்சைகள் மற்றும் தடுப்பூசிகள் போட்டு சிகிச்சை அளித்தனர்.

கூட்டுறவு சங்க துணைத் தலைவர் அழகு, ஊராட்சிச் செயலர் அழகப்பன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சம்பா சாகுபடியில் கேள்விக்குறியாகும் மகசூல்**

தொடர் மழையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா பருவ நெல் சாகுபடியில் மகசூல் இயல்பான அளவுக்குக் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

காவிரியில் போதுமான அளவுக்கு நீர் வரத்து இல்லாததாலும், தென் மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவுக்கு இல்லாததாலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடியைத் தொடங்குவதில் விவசாயிகள் மத்தியில் தயக்கம் நிலவியதுஎனவே ., நவம்பர் மாதத்தில்தான் பெரும்பாலான இடங்களில் சாகுபடி தொடங்கப்பட்டதுஎனவே ., அக்டோபர் மாதத்துடன் முடிய வேண்டிய சம்பா நடவுப் பணி டிச .10-ம் தேதியில்கூட இயல்பான பரப்பளவை எட்டவில்லை. மாவட்டத்தில் இதுவரை சம்பா சாகுபடியில் 98,200 ஹெக்டேரில் மட்டுமே நடவுப் பணி முடிந்துள்ளதுஇது இயல்பான . பரப்பளவைவிட ஏறத்தாழ 7,000 ஹெக்டேர் குறைவு தாளடியில் .28,700 ஹெக்டேரும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், நிகழாண்டு வடகிழக்குப் பருவ மழை இயல்பான அளவை விட கூடுதலாகப் பெய்துள்ளது .

இந்தப் பருவத்தில் இயல்பான பரப்பளவான474.7 மிக்கு பதிலாக .மீ. .நிகழாண்டு டிச9 வரை 664.8 மிஇது .மழை பதிவானது .மீ., இயல்பான அளவைவிட 40 சதம் கூடுதல். எனவே, தாமதமாகத் தொடங்கப்பட்ட சம்பா சாகுபடியில் தொடர் மழை காரணமாக பல இடங்களில் நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன மாவட்டத்தில் வியாழக்கிழமை வரை .2,723

ஹெக்டேரில் பயிர்கள் நீரில் மூழ்கி இருப்பது தெரிய வந்துள்ளதுமேலும் .,
134.4 ஹெக்டேரில் பயிர்கள் அழுகி சேதமாகினபல இடங்களில் கதிர்விட்ட .
நிலையில் உள்ள பயிர்களும் கடந்த வாரம் காற்றுடன் பெய்த மழையால்
.சாய்ந்துவிட்டன நாற்பது நாள்களுக்கு மேலாக தொடர்ந்து மழை பெய்ததால்
மகசூல் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர்குறிப்பாக .,
முன் பட்ட சம்பா பயிர்களில் இப்போது பூ பூக்கும் தருணத்தை எட்டியுள்ளது .
இந்தச் சூழ்நிலையில் மழை பெய்வதால் மகரந்தச் சேர்க்கை ஏற்படுவதில்
இதனால் .பிரச்னை நிலவுகிறது, இப்பயிர்களில் பூ பூப்பது சிக்கலாக
இருக்கிறது. இதுகுறித்து மூத்த வேளாண் வல்லுநர் பிகலைவாணன் .
தொடர்ந்து மழை பெய்தாலும் பல இடங்களில் பயிர்கள் நன்றாக :தெரிவித்தது
தொடர்ந்து .சில இடங்களில் பயிர்கள் மூழ்கின .இருக்கிறது7 நாள்கள் வரை
மூழ்கினாலும் பயிர்கள் தாங்கும்அதற்கு மேல் மூழ்கி இருந்தால் பயிர்கள் .
பாதிக்கப்படும்நாகை ., திருவாரூர் மாவட்டத்தில் இளம் பயிர்கள் நீரில்
மூழ்கியதால் பாதிக்கப்பட்டனநீரில் மூழ்கிய பயிர்களில் மகசூல் பாதிப்பு .
.இருக்கும்

சூரிய ஒளி இல்லாததால் இலைக்கருகல் நோய் வருவதற்கும் வாய்ப்புள்ளது .
முன் பட்ட சம்பா பயிர்கள்தான் இப்போது பூ பூக்கும் தருணத்தில் உள்ளது .
தொடர் மழை காரணமாக இந்தப் பயிர்களில் விழும் மழைத் துளியால் ஆண்
இதன் காரணமாக மகரந்தச் சேர்க்கை .மகரந்தம் கழுவி போய்விடும்
இனிமேல் பூ பூத்தால் பிரச்னை இருக்காது .ஏற்படுவதில் சிக்கல் நிலவுகிறது
மாவட்டத்தில் இயல்பான மகசூல் அளவா .என்றார் கலைவாணன்க
ஹெக்டேருக்கு 6 டன்களாக உள்ளதுகடந்த ஆண்டும் இதேபோல தொடர்ந்து .
மழை பெய்ததால், இயல்பான அளவை விட குறைவாகவே கிடைத்தது .
அதாவது, ஏக்கருக்கு 35 மூட்டைகள் கிடைப்பதற்குப் பதிலாக 25 முதல் 30
மூட்டைகளே மகசூல் பெற முடிந்ததுஇதேபோல ., நிகழாண்டும் தொடர் மழை
பெய்வதால் மகசூல் கேள்விக்குறியான நிலையில் உள்ளது.

## 2,722 ஹெக்டேரில் நெல் பயிர்கள் மூழ்கின

தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த மழையால் நீரில் மூழ்கிய பயிர்களின் பரப்பளவு வியாழக்கிழமை 2,722 ஹெக்டேராக அதிகரித்தது.

மாவட்டத்தில் வியாழக்கிழமை மழையளவு குறைந்துவிட்டாலும், புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து வரும் தண்ணீரால் நீரில் மூழ்கும் பயிர்களின் பரப்பு அதிகரிக்கிறது.

மாவட்டத்தில் வியாழக்கிழமை வரை 2,722.3 ஹெக்டேரில் சம்பா, தாளடி பருவ நெல் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளனஇதில் ., அதிகபட்சமாக மதுக்கூர் வட்டாரத்தில் ஒரே நாளில் 1,095 ஹெக்டேரில் நெல் பயிர்கள் மூழ்கின . புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து வரும் மழை நீர் கண்ணனாற்றில் இதனால் .பெருக்கெடுத்து வருகிறது, தரைப்பாலத்திலிருந்து வழிந்த தண்ணீர் மதுக்கூர் வட்டாரத்தில் உள்ள சொக்கனாவூர், பெரமேல்குடி, புளியக்குடி ஆகிய கிராமங்களில் உள்ள வயல்களில் புகுந்தது. இதற்கு அடுத்து பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 429.6 ஹெக்டேரிலும், ஒரத்தநாடு வட்டாரத்தில் 247 ஹெக்டேரிலும், திருவையாறு வட்டாரத்தில் 211 ஹெக்டேரிலும், திருவிடைமருதூர் வட்டாரத்தில் 156.5 ஹெக்டேரிலும், பூதலூர் வட்டாரத்தில் 156 ஹெக்டேரிலும், கும்பகோணம் வட்டாரத்தில் 152.2 ஹெக்டேரிலும் உள்ளிட்ட பகுதிகளில் நெல் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளனதவிர ., வயல்களில் தொடர்ந்து தண்ணீர் தேங்கி இருந்ததால் இதுவரை 134.4 ஹெக்டேரில் சம்பா, தாளடி நெல் பயிர்கள் சேதமாகி இருப்பது தெரிய வந்ததுமேலும் ., சேதமான பயிர்கள் குறித்து வேளாண் துறையினர் ஆய்வு செய்து வருகின்றனர்.

இதேபோல, ஒரத்தநாடு, நாஞ்சிக்கோட்டை உள்பட பல இடங்களில் மரவள்ளிக்கிழங்கு பயிர்களும் தொடர் மழையால் சேதமாகின .கிலோவுக்கு ரூ . 20 விலை போக வேண்டிய கிழங்கு அறுவடை தருணத்தில் அழுகிவிட்டதால் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

1,301 வீடுகள் சேதம்இதேபோல :, மாவட்டத்தில் தொடர் மழையால் 1,225 வீடுகள் பகுதியாகவும், 76 வீடுகள் முழுமையாகவும் என மொத்தம் 1,301 வீடுகள் சேதமடைந்தன மழையால் இதுவரை .8 பேர் உயிரிழந்தனர்மேலும் ., 349 கால்நடைகள் இறந்தன.

**மதுக்கூர் கண்ணனாற்று வெள்ளம் புகுந்து 3,400 ஏக்கர் சம்பா மூழ்கியது**

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் கண்ணனாற்று நீருடன் அப்பகுதியில் ஓடும் திருமேனி ஆறு, பாமணி ஆறு ஆகிய ஆறுகளின் தண்ணீரும் சேர்ந்து கொண்டதால் கண்ணனாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறதுஇதனால் . கண்ணனாற்றில் நிரம்பி வழியும் தண்ணீர் வயலுக்குள் புகுந்ததால்

அப்பகுதியிலுள்ள6 கிராமங்களில் சுமார் 3,400 ஏக்கரில் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கின.

வியாழக்கிழமை காலை நிலவரப்படி சொக்கனாவூரில் 1,000 ஏக்கர், புளியக்குடியில் 700 ஏக்கர், பெரியக்கோட்டையில் 500 ஏக்கர், மதுரபாஷாணியபுரம், காரப்பங்காடு, சிரமேல்குடியில் தலா 400 ஏக்கர் பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ள சம்பா பயிர்கள் நீரில் மூழ்கி விட்டன.

இருப்பினும், புதன்கிழமை இரவு முதல் மதுக்கூர் பகுதியில் பெரிய அளவில் மழை இல்லாததால் கண்ணனாற்றில் தண்ணீர் வரத்து படிப்படியாக குறைந்து வருகிறதுஇந்த நிலை நீடித்தால்தான் வயல்களில் தேங்கிய மழை நீரை வடிக்க . .முடியும் என்று அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்

### மண் மாதிரி முடிவுகளின்படி விவசாயிகள் உரமிட அறிவுறுத்தல்

மண் மாதிரி முடிவுகளின்படி விவசாயிகள் தங்களது வயல்களில் உரமிட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.


இதுதொடர்பாக திருநெல்வேலி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் இல:பெருமாள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு .

இம்மாவட்டத்தில் உள்ள விளை நிலங்களில் வேளாண்மைத் துறை களப்பணியாளர்கள் மூலம் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளதுநீர்ப்பாசனம் . உள்ள விளை நிலங்களுக்கு2.5 ஹெக்டேருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி நிலங்களுக்கு 10 ஹெக்டேருக்கு ஒரு மண் மாதிரியும் எடுக்கப்பட்டு வருகிறதுஇந்த மண் மாதிரிகள் மண் பரிசோதனை நிலையத்துக்கு . அனுப்பப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வு முடிவுகள் மண் வள அட்டைகளாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறதுவிவசாயிகள் . இம்மண் வள அட்டையில் அளிக்கப்பட்டுள்ள பரிந்துரைப்படி உரமிடும்போது மண்வளம் பாதுகாக்கப்படுகிறது .மகசூலும் கூடுதலாகக் கிடைக்கிறது . .உரச்செலவும் குறைகிறது .பூச்சிநோய் தாக்குதல் குறைகிறது

மண் மாதிரிகள் ஆய்வுகள் மூலம் களர் மற்றும் களர் உவர் நிலங்களைக் கண்டறிய உதவுகிறதுஇந்த நிலங்களுக்கான உரப் பரிந்துரைகளும் மண்வள . .அட்டையில் வழங்கப்பட்டுள்ளது இதன்படி உரமிடும்போது களர் மற்றும் களர் உவர் நிலங்களைச் சீர்திருத்த இயலும்எனவே ., விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி மண் வள அட்டைகளைப் பெற்று அந்த அட்டையில் அளிக்கப்பட்டுள்ள உரப் பரிந்துரைகளின்படி உரமிட வேண்டுமென செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## டிச.10 - வானிலை முன்னறிவிப்பு: சற்றே ஓய்ந்தது பருவமழை




வட தமிழகத்தில் மழை இல்லை, தென் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடந்த அக்டோபர் மாதம் 28-ம் தேதி தொடங்கிய வடகிழக்கு பருவமழை தற்போது தான் சற்று ஓய்ந்துள்ளது. இருப்பினும், வட தமிழகத்தில் மழை இல்லை, தென் தமிழகத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக இன்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் எஸ்.பாலச்சந்திரன் கூறியதாவது:

"குமரிக்கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுவிழந்தது. இதன் காரணமாக நேற்று காலை முதல் இன்று காலை வரையிலான 24 மணி நேரத்தில் ஒரு சில பகுதிகளில் மழை பெய்துள்ளது.அதிகபட்சமாக தேனி மாவட்டம் உத்தமபாளையத்தில் 4 செ.மீ மழை பதிவாகியுள்ளது. தொடர்ந்து, தென் கோடி மாவட்டங்களான தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் சில இடங்களில், கிழக்கு திசை காற்றின் வேக மாறுதல் காரணமாக மழை பெய்யலாம்.

தூத்துக்குடி மற்றும் குமரி மாவட்டத்தை தவிர பிற பகுதிகளில் குறிப்பிடும்படியான மழை இல்லை. கனமழைக்கான வாய்ப்புகளும் இல்லை. சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

மேலும், டிசம்பர் 11, 12 தேதிகளில் தூத்துக்குடி, குமரி மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும், இதர தமிழக பகுதிகளில் ஓரிரு இடங்களிலும் மழைக்கு வாய்ப்புள்ளது. 13,14 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## உலக மசாலா: விவசாயிகள் கவனத்துக்கு!



ஆப்பிரிக்க விவசாயிகள் எல்லோரும் விலங்கியலாளர் டாக்டர் லூசி கிங்குக்கு நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆப்பிரிக்க யானைகள்

கிராமங்களுக்குள் புகுந்து, பயிர்களை நாசம் செய்வது அங்கே வழக்கமான விஷயமாக இருந்து வந்தது. அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க ‘யானைகளும் தேனீக்களும்’ என்ற பிராஜக்டை உருவாக்கினார் லூசி. யானைகளுக்கு வேல மரங்கள் என்றால் பிடிக்காது, காரணம் அந்த மரங்களில் தேனீக்கள் கூடு கட்டியிருப்பதுதான். பல ஆண்டுகள் யானைகளை ஆராய்ச்சி செய்த பிறகு, தேனீக்களுக்கு யானைகள் பயப்படுவதைக் கண்டுபிடித்தார் லூசி.

விவசாய நிலங்களைச் சுற்றிலும், 30 மீட்டர் இடைவெளியில் தேனீ வளர்ப்பு தொட்டிகளை வைத்தார். விளைந்திருக்கும் பயிர்களின் வாசத்தை வைத்தே யானை அந்த இடம் நோக்கி வரும். அப்படி வரும் யானைகள் தேனீக்களின் ரீங்காரம் கேட்டவுடன் பின்வாங்கும். எல்லா கூடுகளும் ஒரே கம்பியால் இணைக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை தேன் கூட்டை யானை தொட்டுவிட்டால், கம்பி அதிர்வதன் மூலம் கூடுகளில் உள்ள தேனீக்கள் யானைகளைக் கொடுக்கால் தாக்க ஆரம்பித்துவிடும்.

யானை அலறியடித்துகொண்டு ஓடிவிடும். பிறகு இந்தப் பக்கமே வராது. ''தேனீக்களை விளைநிலங்களில் வளர்ப்பதன் மூலம் விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் வருகிறது. யானைகளிடமிருந்து பயிர்களும் பத்திரமாகப் பாதுகாக்கப்படுகின்றன. யானைகள் மிகச் சிறந்த உயிரினங்கள். அவற்றின் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், மின்சாரக் கம்பிகளைப் பயன்படுத்தினால் அது யானைகளுக்கும் மனிதர்களுக்கும் ஆபத்தாகிவிடுகின்றன. தேன் கூடுகளால் வேலி அமைத்து விட்டால் மனிதர்கள், யானைகளுக்கு மட்டுமில்லை, இயற்கைக்கும் நல்லது'' என்கிறார் லூசி கிங்.

''யானை ஒருநாளைக்கு 400 கிலோ உணவு சாப்பிடும். எங்க நிலத்துக்குள் நுழைந்தால் ஒன்றும் மிச்சம் இருக்காது. இதுவரை யானைகளைப் பார்த்தால் தகர டப்பாவால் தட்டுவோம், நெருப்புப் பந்தம் பிடிப்போம். இப்போது எங்களுக்கும் பிரச்சினை இல்லை, யானைகளுக்கும் பிரச்சினை இல்லை. வருமானமும் கூடியிருக்கிறது'' என்று மகிழ்கிறார் ஒரு விவசாயி. இயற்கை,

மனிதர்கள், யானைகள் என்று எல்லா வழியிலும் பிரமாதமான திட்டத்தை வகுத்து கொடுத்த லூாசி கிங்குக்கு சர்வதேச விருதுகள் குவிகின்றன.

**நம் ஊர் விவசாயிகளும் இந்தத் திட்டத்தைப் பின்பற்றணும்...**

பார்சிலோனாவில் உள்ள ஓர் உயிரியல் பூங்காவில் வசிக்கும் உராங்குட்டானை விலங்கியல் ஆர்வலர் படம் பிடித்தார். கண்ணாடிக் கூண்டுக்குள் இருந்த உராங்குட்டான் அருகே சென்று ஒருவர் அமர்ந்தார். கையில் இருந்த பழம் ஒன்றை தம்ளருக்குள் போட்டார். பிறகு ஒரு குலுக்கு குலுக்கி, காலியான தம்ளரைக் காட்டினார். உராங்குட்டான் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. மீண்டும் பழத்தை எடுத்துக் காட்டினார். உடனே கண்ணாடிக்கு அருகில் வந்து அமர்ந்தது உராங்குட்டான். தம்ளருக்குள் பழம் போடுவதை உற்று நோக்கியது. ஒரு குலுக்கலில் தம்ளரில் இருந்த பழம் மாயமானதைக் கண்டவுடன், வாய்விட்டுச் சிரித்தது. தரையில் புரண்டு, கைகளால் தரையை அடித்தபடி சிரித்துக்கொண்டே இருந்தது.

**அடடா! நம்மைப் போலவே உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன!**

விகடன்

**அழுகிய நெல்லும், மரவள்ளியும்... பூக்காமல் காய்க்காமல் சுருண்ட உளுந்து: விவசாயிகள் வேதனை!**

மெல்லிதாக வெயில் வெளிச்சம் பரவிய நிலையில், 'அப்பாடா... இத்துடன் மழை முடிந்ததோ' என்று பெருமூச்சுவிட முற்படும் முன்னரே மேகம் கருத்து மறுமழை கொட்டத் தொடங்கியது. ஏற்கெனவே கொட்டிய கனமழையால் ஏற்பட்ட இழப்பையே இன்னும் ஈடு செய்ய முடியாமல் நிர்க்கதியாக நிற்கின்ற நிலையில், இந்த மழை துடைத்தெறிந்துபோன விவசாய வேதனை அத்தனை அதிகம்.



விழுப்புரம் சாமிப்பேட்டை பகுதியைச் சேர்ந்த விவசாயியும் விழுப்புரம் நகர விவசாய அணி துணை அமைப்பாளருமான டி.பாஸ்கரன் நம்மிடம், "ஆனாங்கூர் ஏரி நிரம்பி வழிந்து ஆழாங்கால் வாய்க்கால் உடைப்பு ஏற்பட்டு அந்தப் பகுதிகளில் இருந்த விவசாய நிலங்களில் பாய்ந்தது. இதனால் அந்தப் பகுதியில் இருந்த விவசாய பயிர்கள் அனைத்துமே நீரில் மூழ்கி அழுகிவிட்டது. இந்தப் பகுதியில் மட்டும் சுமார் 500 ஏக்கர் நெல், சுமார் 200 ஏக்கரில் பயிரிட்டிருந்த மரவள்ளி உள்ளிட்ட பயிர்கள் அனைத்துமே எடுக்க முடியாதபடிக்கு எந்தப் பயன்பாட்டுக்கும் வராத அளவுக்கு முழுவதுமே அழுகிவிட்டது.

நேரடி நெல்விதைப்பு மொத்தமே போச்சு. மரவள்ளி குறைந்த பட்சம் போன வருஷத்துல டன்னுக்கு சுமார் 5,000 மற்றும் 6,000 ரூபாய்ன்னு நல்ல விலைக்கு போச்சு. ஆனால், இப்ப ஏற்பட்ட பாதிப்புல வெறும் 500க்கும், 700க்கும்னு வந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுருக்கு. இது விதைச்ச செலவைக்கூட ஈடு செய்யாது. அழுகிப்போன கிழங்குகளை எடுக்கவும் முடியாது. அப்படியே விட்டுவிட வேண்டிய நிலைமைதான். நெல்லுக்கும் இதே நிலைமைதான். இழந்த எல்லா பயிர்களுமே அறுவடைக்கு தயாராக இருந்த தருணம் இது.



கதிர் விட்டு நிற்கும் நெல்லும், பிடுங்குவதற்கு தயாராக இருந்த மரவள்ளியும் தூர்வாரப்படாத வாய்க்காலில் இருந்து வழிந்த மழைநீரால் அழுகிப் போனது வேதனை. அதேமாதிரி சவுக்குப் பயிரும் சாய்ந்து பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. சவுக்குக்கு இடையில் ஊடுபயிராக உளுந்து பயிரிடப்பட்டு இருந்தது. அந்த உளுந்தும் பெரிய அளவுல பாதிக்கப்பட்டது. கார்த்திகை மாதம் முதலிலேயே உளுந்து விதைச்சிட்டாங்க. முளைச்சி வந்த செடி எல்லாமே நீரில் மூழ்கியதால அப்படி அப்படியே சுருண்டுருச்சி. பூக்காம, காய்வைக்காம அப்படியே அழிஞ்சு போகிற நிலைமையாகிவிட்டது. இந்த வருஷம் உளுந்து நல்ல விலைக்குப் போகும்னு நிறைய பேரு உளுந்து விதைச்சாங்க. அத்தனையும் இப்ப நஷ்டப்பட்டு விவசாயிங்க வேதனையில

நிக்கிறாங்க. இன்னொரு வேதனை என்னவென்றால், இந்த கனமழையால் ஏற்பட்ட விவசாய பாதிப்புகளை அரசு அதிகாரிகள் முறையான கணக்கெடுப்பு நடத்தாதது மிகுந்த வேதனைக்குரியதாக இருக்கிறது. கணக்கெடுப்புக்கு வரவேண்டிய அதிகாரி நேரடியாக விவசாய நிலங்களுக்கு சென்று பார்வையிடவே இல்லை. ஊருக்குள்ளேயே ஒரு இடத்தில் உட்கார்ந்து ஒரு சிலரை அழைத்து பேசிவிட்டு அந்த ஒரு சில பேருக்கு மட்டும் நிவாரண உதவி கிடைக்கிற மாதிரி செய்துவிட்டு செல்கிறார்கள். அதுவும் பத்து ஏக்கர் பதினைந்து ஏக்கர் பாதிக்கப்பட்டு இருந்தாலும் இரண்டு ஏக்கரை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு நிவாரணத் தொகைக்கு பரிந்துரைக்கிறார்கள்.



இப்படி முறையற்ற கணக்கெடுப்புகள், பயிர்களை இழந்து நிற்கும் விவசாயிகள் மத்தியில் மிகுந்த மனவேதனையை உண்டாக்கியிருக்கிறது. எனக்குக்கூட கிட்டத்தட்ட பதினைந்து ஏக்கர் பயிர்கள் பாதிப்படைந்துவிட்டது. ஆனால், சும்மா ஆறுதலுக்காக இரண்டு ஏக்கர் அளவுக்கு மட்டும் போட்டோ எடுத்துக்கிட்டு போயிருக்கிறாங்க. அதுகூட தொடர்ந்து கேட்டுக்கிட்டதாலதான் நடந்தது. ஆனாங்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட இந்தப் பகுதியில ஆழாங்கால் வாய்க்காலில் இருந்து வழிந்த வெள்ள நீரில் முழுகியதால்தான் பயிர்கள் அழுகி நாசமானது. வாய்க்கால் தூர்வாரப்படாததே வெள்ளநீர் வழிந்ததற்கான முக்கியமான காரணம் ஆகும். தூர்வாரமலேயே அங்கங்கே செக்டேம் மட்டும் கட்டியதால்தான் தண்ணீர் வாய்க்காலில்

முழுவதுமாக போகாமல் வழிந்து பக்கத்தில் உள்ள விவசாய நிலங்களில் பாய்ந்து பயிர்கள் நாசமானது. இதுவரை எந்த அரசாங்கமும் தூர்வாருவதில் அக்கறை எடுத்துக்கொள்ளாததே இத்தனை இழப்புக்கும் காரணம் ஆகும்.

இத்தனையும் தாண்டி அறுவடை செய்து கமிட்டிக்கு கொண்டு போனால், அங்கே ஒரு மூட்டைக்கு இருபது ரூபாயிலிருந்து முப்பது ரூபாய் வரை விவசாயிகளிடத்தில் உள்ளே இருக்கிற ஆட்கள் வசூல் செய்கிறார்கள். இது எப்பவுமே நடக்கிறதுதான் என்றாலும் எல்லாமும் இழந்து நிற்கிற இந்த நேரத்திலும் இது தொடர்வது வேதனையான ஒன்று. கமிட்டிக்குள் கமிஷன் என்பதை இதுவரை எந்த அரசும் அரசியல் கட்சிகளுமே இதனை தட்டிக் கேட்டதே இல்லை. இந்த விஷயத்தில் விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்க ஒருவருமே இல்லை என்பது வேதனைக்குரியது. இப்ப அரசாங்கம் அறிவிச்சிருக்கிற விவசாயிகளுக்கான நிவாரணத்தொகை பெரிதாக நாங்கள் இழந்த இழப்பீட்டை ஈடுசெய்யக்கூடியதாக இல்லை" என்றார் வேதனையோடு.